சுதேசமித்திரன்

15—8—48

விலை 4 அணா

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY





இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

ஜெய்ஹிந்த்! வந்தேமாதரம்!

இந்திய சுதந்திர முதலாவது ஆண்டு விழா

அனைவருக்கும் எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

நூல் & பட்டுச் சேலைகள்

- சொந்தக் கைத்தறிகளில் வித விதமான டிசைன்களில் உற்பத்தி செய்வதில் நீண்டகால அனுபவஸ்தர்கள்.
- **H. R. H.** வேல்ஸ் இளவரசர் தலைமையில் 1924-ல் நடத்திய பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்றவர்கள்.

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

கெருடலாயத் தெரு : : : கும்பகோணம்

பிராஞ்சு :—20, லெக்ஷ்மிபுரம் 2-வது தெரு, மதுரை.

N. B. கெட்டிச்சாய கைத்தறி நூல் சேலைகள், ஜரிகை துப்பட்டாக்கள், வேஷ்டிகள் ரகவாரியாகவும் கிடைக்கும்.

ஜோதிஷ வித்வான்

V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க......................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு..............................அண 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க....................................ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Dr பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்

11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

விக்டரி பாம்



சக்தி வாய்ந்த அற்புதமான மருந்து, முடக்கு வாதம், கீல் வாதம், பிடிப்பு பல்வலி, பல வித சரும நோய்கள் அனைத்தும் குணமாகும். நன்றாக நீர் இறங்காமல் அவஸ்தைப்படுவோருக்கு தொப்புளைச் சுற்றி ஒத்தடம் கொடுத்தால் சரிப்படும். விலை புட்டி ரூ. 1—8—0.

தேசபந்து ஹர்பல்ஹோம்

Deshbandhu Herbal Home

7, Ganga Prasad Mukerji Road,

Bhowanipore Calcutta 25.

சக்தி ஆரூடம்!

ரேடியோ புகழ் ஸ்ரீமதி திருக்கோவிலூர் S. அலமேலு எழுதுகிறார்:—

" தாங்கள் எனக்கு மே மீ 27-ந் தேதியிலிருந்து ஜூன் மீ 3-ந் தேதிக்குள் ரூ. 1000 கிடைக்குமென்று கூறியபடியே ரூ. 1000 கிடைத்தது."

1 முதல் 3 கேள்விகள் ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

ஐடியால்

புத்துயிர் அளிக்கக் கூடிய நேர்த்தியான மணம் உள்ள உண்ணத கிருமி நிவாரணி.

ஒரு

I.T.L.

தயாரிப்பு

ஐடியால் சுத்தமான தங்க நிறமுள்ள மஞ்சள் திராவகம். அது புத்துயிர் அளிக்கக் கூடிய நேர்த்தியான மணமுள்ளது. அது விஷமில்லாதது. அதனால் கறைகள் ஏற்படாது. அது பண்டங்களை கரைத்து விடாது. அது வைத்தியத்திற்கும், வீட்டு உபயோகத்துக்கும், சொந்த சுகாதாரத்துக்கும் இன்றியமையாதது.

தி மைசூர் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லாபரேடரி லிமிடெட், மல்லேஸ்வரம், பெங்களூர். இவர்களால் தயார்செய்யப்பட்டது.

கைவசம் ஒரு குப்பி வைத்திருக்கவும்

விற்பனை ஏஜண்டுகள்:

பெஸ்ட் அண்ட் கம்பெனி லிமிடெட்.

தபால் பெட்டி 63. சென்னை.

DJK-76 TM

பரிசு! பரிசு !!

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுகிறீர்கள், பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனான ஆர். கிருஷ்ணா பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காலி உறை அனுப்பினால் 50—0-0-3 பொட்டலம் இனாம்.

S. M. கிருஷ்ணா அண்டு கோ.,

2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு. மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானால் ரியல் அசோகா அண்டு கோ. வில் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை செண்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸலைன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N. B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.,

40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

45 வருஷமாகப் புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்:

தாளக பஸ்பம்

காசம், ஈளை, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு 7 விதமும் அஸ்திசுரம், எலும்புருக்கி (T. B.) க்ஷயரோகமும் தீருகிறது. ½ மண்டல பஸ்பம், தாளிசபத்திரி சூரணமும் ரூ. 10.

அப்ரேக் செந்தூரம்

அடிக்கடி போகும் நீர், தாகம், வரட்சி, எலும்புருக்கி, பவுத்திரம், நீரில் உள்ள சர்க்கரைசத்து பூரண சுகமாகிறது. ½ மண்டலம் அனுபானத்துடன் ரூ. 15.

எவ்வித மருந்துகள் சாப்பிட்டும் தீராத கொடிய வியாதிகளுக்கு வியாதி விவரம் தெளிவாக எழுதினால் தகுந்த உயர்ந்த மருந்துகள் கொடுத்து குணப்படுத்துகிறோம்.

வைத்தியபதி

R.M. நாராயணசாமி பிள்ளை

தன்வந்திரி வைத்தியசாலை,

பழனி. (S. I.)

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ ஆடிமீ 31௳ ★ 1948-௵ ஆகஸ்டுமீ 15௳ No. 29

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு

இந்த ஆகஸ்டு பதினைந்தாந்தேதி எல்லா திசைகளிலிருந்தும் சுதந்திர கோஷம் காதைப் பிளக்கிறது !

சுதந்திரம் கிடைக்காதிருந்த காலத்தில் வெகு சொல்பமான பேர்கள்தான் சுதந்திரத்தைப்பற்றிப் பேசினார்கள்; அதற்காக உழைத்தார்கள். அப்பொழுதெல்லாம் இவ்வளவு சுதந்திரக் கூச்சல் இருந்ததில்லை.

சுதந்திரம் கிடைத்த இந்த ஒரு வருஷ காலத்திற்குள் தேசத்தில் ஏற்பட்டிருக்கும் சுதந்திர ஆர்வத்தைச் சொல்லி முடியாது. ஒரு பொருள் கிட்டிய பின்பு,வேண்டுமென்று கூச்சல் போடுவது ஆச்சரியமாயிருக்கலாம். அந்த மாதிரி ஆச்சரியம் பாரத தேசத்தில் இன்று நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. சுதந்திரம் கிடைத்தபின்பு சுதந்திரம் வேண்டும் என்று பலமாகக் கேட்பவர் இன்று வெகு பேர் இருக்கிறார்கள்.

அதில் முதல் பேர்வழி நிஜாம். "என் சுதந்திரத்தை இந்தியா பறித்துவிடப் பிரயத்தனப்படுகிறது. உயிரை விட்டாலும் சுதந்திரத்தை விடமாட்டேன்'' என்கிறார் நிஜாம். சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் நிஜாம் பரம்பரையின் யோக்கியதை நன்றாகத் தெரியும். சுய பலமில்லாத ராஜ குடும்பம், எப்பொழுது யார் கை வலுத்திருக்கிறதோ அந்தப்பக்கம் சேரும் பேர்வழிகள். தாம் பிரிட்டிஷாரின் அடிமை என்பதில் கௌரவம் கொண்டு இன்னும் பிரிட்டிஷ் சம்பந்தம் வேண்டுமென்று பாடுபட்டுக்கொண்டிருப்பவர்; இவர் ஒரு சுதந்திரக் கூச்சல் போடுகிறார்.

இரண்டாவது கூச்சல் பாகிஸ்தானிலிருந்து கேட்கிறது. "பாகிஸ்தானின் சுதந்திரத்தை இந்தியா விழுங்கிவிடப் பார்க்கிறது. அதற்கு சம்மதிக்க மாட்டோம். எங்கள் உயிரையாவது,இல்லாவிட்டால் எல்லைப்புற ஆப்ரிடிகள் உயிரையாவது,அதுவும் இல்லையென்றால் எம் வசம் சிக்கிக் கொண்டிருக்கும் ஹிந்துக்கள் உயிரையாவது கொடுத்து எங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றியே தீருவோம்'' என்று அவர்களும் சுதந்திரக் கூச்சல் போடுகிறார்கள். ஹிந்து ஆதிக்கம் வேண்டாம் வெள்ளைக்காரனே இருக்கட்டும் என்றபேர் வழிகள் இவர்கள். சுதந்திரத்துக்கு சதா முட்டுக்கட்டை போட்ட ஒரு வர்க்கம் இப்படிப் பேசுகிறது.

மூன்றாவது கூச்சல் சுதந்திரம் என்பதைக் கனவில்கூடக் காணாத மற்றொரு கோஷ்டியிடமிருந்து எழுகிறது. "தமிழ்நாட்டு சுதந்திரத்தை வடக்கத்தியான் ஆதிக்கத்தில் விடமாட்டோம்; தமிழ்நாடு தமிழருக்கே'' என்று காதில் விழுகிறது. இந்தக் கட்சிப்

—அடுத்த பக்கம்

(முன்பக்கத் தொடர்ச்சி)

பேர்வழிகள்தான் பிரிட்டிஷாரிடம் சதா உத்தியோகம் வாங்கி, அடிமைப் பிழைப்புப் பிழைத்து சுதந்திரத்துக்குப் பெரிதும் தடையாக இருந்தவர்கள்.

இந்தமாதிரி எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு; பேச்சு என்றுதான் பாரதியார் பாடினர். ஏனென்றால் காரியத்தில் வந்தால் இவையெல்லாம் சுதந்திரம் ஆகமாட்டா, அடிமைத் தனந்தான் என்பதை அவர் அறிந்தே இருந்தார். நாமும் அறிந்துதானிருக்கிறோம். ஆனால் வெளி உலகத்தின் காதுகளுக்கு இந்தக் கூச்சல்கள் உண்மை சுதந்திரக் கூச்சலாக கேட்கலாம்.

இவ்விதம் பொய் உண்மையாகவும், உண்மை பொய்யாகவும் இந்த ஆகஸ்டு மாதத்தில்தான் தோன்ற முடியும். ஏனென்றால் இந்தியாவுக்கு ஏற்பட்ட சர்வ கஷ்டங்களும் இந்த ஆகஸ்டு மாதத்தில்தான் ஏற்பட்டிருக்கின்றன. 1639-ம் வருஷம் ஆகஸ்டில்தான் ஸர் பிரான்ஸிஸ்டே சென்னையை வாங்கி பிரிட்டிஷார் அங்கு வந்து இறங்க ஏற்பாடு செய்தார். அந்த நிகழ்ச்சிதான் இவ்விதழின் அட்டைப் படமாக விளங்குகிறது. 1751-வது வருஷ ஆகஸ்டில்தான் கிளைவ் ஆற்காட்டைப் பிடித்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை இந்த நாட்டில் ஊன்றினர். 1858 ஆகஸ்டில் இந்தியாவை பிரிட்டிஷ் ராஜாங்கம் ஈஸ்ட் இந்தியா கம்பெனியிடமிருந்து பிடுங்கிக்கொண்டு பிரிட்டிஷ் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டது. 1935 ஆகஸ்டில் இந்தியா கவர்ன்மெண்டு மசோதா சட்டமாயிற்று. 1939 ஆகஸ்டில் மாக்டொனல்ட் வகுப்புத் தீர்ப்பை அளித்து இந்தியாவை குட்டை குழப்பினர்.

இப்பேர்ப்பட்ட ஒரு ஆகஸ்டு மாதத்தில் இந்த விபரீத சுதந்திரக் கூச்சல்களும் கேட்கின்றன. இவை அடுத்த ஆகஸ்டுக்குள்ளாவது நிற்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம். எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சாக இருக்காமல், காரியத்திலும் சிறிது சுதந்திரம் கிட்டும் நன்னாளை எதிர் பார்ப்போம்.

புது வருஷ-மங்களம்

கவியரசர் பாரதியார்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற் றமிழர்!
வாழிய பாரத மணித் திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந்திடுக! மற மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றுஞ்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந் தேயத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!



சுதந்திரத் திருநாள்

என். வெங்கடாசலம்

ஆகஸ்ட்டு மாதப் பதினைந்தாம் நாள், அது
  ஆன்றோர்க்கும் சான்றோர்க்கும் ஓர் திருநாள்
அன்னையின் தாள்தளை நீங்கி யினறே, சிறை
  ஆண்டுதான் ஒன்று கழிந்ததுவே.

தீரர் ஜவஹர்லால் வீரத் தலைமையில், எண்
  திக்கெலாம் நம்புகழ் ஓங்கியது
சுதந் தரதாகம் தணித்துவிட்டோம், அந்த
  சொந்தமாய் நாட்டினை ஆண்டுவிட்டோம்.

இன்பம் அளித்ததும் சென்ற ஆண்டே, நாம்
  இன்னல் அடைந்ததும் செனற ஆண்டே
விடுதலை தந்ததும் சென்ற ஆண்டே, நம்
  வீரர் மறைந்ததும் சென்ற ஆண்டே.

சென்றதை நாமினி மறந்திடுவோம், இனி
  செய்வன நெஞ்சிலே கொண்டிடுவோம்
காந்தியின் சாந்தி வழி நடப்போம், அந்த
  கரையிலா இன்பம் மிளரக் காண்போம்

(வேறு)

காஷ்மீரில் வெற்றி காண்போம், பொல்லா
  காட்டுமிராண்டிகளின் திமிர் ஒழிப்போம்
ரஜாக்கர் ஆட்சி அழிப்போம், அங்கே
  நலமுள்ள மக்கள் ஆட்சி விளங்கச் செய்வோம்

நேரு சர்க்காரைப் போற்றுவோம், இனிமேல்
  நேசமுடன் ஒன்று கூடி பணிபுரிவோம்.
கடமையை முதலில் செய்வோம், பின்னால்
  கருதும் உரிமைகளை நாம் அடைவோம்

(வேறு)

ஹிந்துக்கள் முஸ்லிம்கள் பேதம் வேண்டாம், அந்த
  எல்லோரும் ஒன்றெனச் சாற்றிடுவோம்
மக்களை மாக்களாய் மாற்றிவிட்ட, கொடும்
  மதவெறி, ஐயையோ, வேண்டாமப்பா

அண்ணலின் ஆவி பருகியது, அங்கே
  அன்னையை கூறிடச் செய்ததுவே.
தத்து வெட்டு சண்டை கோரக்காட்சி, அன்றி
  கொண்ட பயன் அந்த உண்டோ கூறும்

வட்டம் பொறித்த புனிதக்கொடி, அதை
  வானுற ஓங்க வளர்த்திடுவோம்.
சோபனம் சோபனம் என்றிடுவோம், உயர்
  சோதியின் தாளிணை நாம பணிவோம்

பண்டித ஜவாஹரின் பிரத்யேகத் தோற்றம்.



சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர்ஜெனரல் ராஜாஜி, நேரு சர்க்காருக்குப் பெரும்பலம். அவரது, ஆழ்ந்த அரசியல் ஞானமும், ராஜதந்திரமும் இன்றைய அநேகம் சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்க உதவும்.

கிடைக்கும் ஒழிவு நேரத்திலும் பண்டித நேரு சும்மாவிருப்பதில்லை. தமக்கு மிக்க நெருங்கியவர்களுடன் அவர் ஸல்லாபிக்கிறார். அத்தகைய பாக்கியம்பெற்ற நாயொன்றை அவர் அன்புடன் தடவிக்கொடுக்கிறார்.



நேரு தமது ஸகோதரி ஹதிஸிங்குடன் பொழுதுபோக்கும் ஒரு காட்சி.

1

எந்தையுந் தாயு மகிழ்ந்து துலாவி
    யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
    முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
    சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தி யென்
    வாயுற வாழ்த்தேனோ—இதை
(பல்லவி) வந்தே மாதரம், வந்தே மாதரம்
    என்று வணங்கேனோ?

2

இன்னுயிர் தந்தெமை யீன்று வளர்த் தரு
    ளீந்தது மிந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
    அறிந்தது மிந்நாடே—அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
    களித்தது மிந்நாடே—தங்கள்
பொன்னுட லின்புற நீர்விளை யாடி யில்
    போந்தது மிந்நாடே—இதை
(பல்லவி) வந்தே மாதரம், வந்தே மாதரம்
    என்று வணங்கேனோ?

3

மங்கைய ராயவர் இல்லற நன்கு
    வளர்த்தது மிந்நாடே—அவர்
தங்க மதலைக ளீன்றமு தூட்டித்
    தழுவிய திந்நாடே—மககள்
துங்க முயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
    சூழ்ந்தது மிந்நாடே—பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
    ஆர்ந்தது மிந்நாடே—இதை
(பல்லவி) வந்தே மாதரம், வந்தே மாதரம்
    என்று வணங்கேனோ?

ராகம் : காம்போஜி　　　　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

(28—வது மேளத்தில் ஜன்யம்)

ஆ: ஸரிகமபதஸ் — அ: ஸ்நிதபமகரிஸ.

1\. ; . தஸ் நி தா பா ; பா பா | பம தப மக மா | பா ; பா ; ||
. . எந் தை யு ந்தா . யு ம கி . . ழ் ந்து . கு லா . வி . ||

; ம பா த பா தா ; ரிஸ் நித | தா நிப ; ; | ; ; பநி தா ||
. யி ருந் த து மி ந் நா . . டே , ... , . . . ||

2\. தம ப ஸா நி தா பா ; பா பம | ப தா ப மக மா | பா ; பா ; ||
. . எ ந் தையு ந்தா . யு ம . கி . ழ் ந்து . கு லா . வி . ||

; ம பா த பா தா ; ரிஸ் நித | தா நிப ; ; | ; ; ப நி தா ||
. யி ரு ந்த து மி ந் நா . . டே . . . . ||

3\. தம ப ஸா நி தா பா ; பா ஸ்நி | நி நி தப மக மா | பா ; நித தம ||
. . எ ந் தையு ந்தா . யு ம . கி . . ழ் ந்து . கு லா . வி . யி . ||

பா ; தா பா தா ; ரிஸ் நித | தா நிப ; ; | ; ; பா பம ||
ரு ந் த து மி ந் நா . . டே . . . . . , அ தன் ||

மா பத ரிஸ் நித தா பா பம மா | ; பத தப மக | மக ரிஸ ரீ ; ||
. முந் தை . ய . ரா . யி . ரம் . ஆ ண் டு . கள் வா . . ழ் ந்து . ||

; ரி பா ம கா ரி ஸ ஸா . ஸப தா | ஸா ; ; ; ; | ; ; மக மா ||
. மு டி ந்த து மி ந் . . நா . . டே . . . . | . , அ . வர் ||

; ப தா நி தா தா ; நீ தா | ; , தா நித | தா , ஸ் நி த நிப ||
. சி ந் தை யி லா . யி ரம் . . எண்ணம்வ ள . ர் ந்து . . . ||

; ப பா த பா தா ; தா , ரி ஸ் நீ, | தா ; ; ; | ; ; நித மா ||
. சி றந் த து மி ந் நா . . . . டே . . . . . இ . தை ||

; பா தா ரிஸ் ஸ் ஸ் நித தா பா | ; ப த ஸ் தப மக | மக ரீ ஸ ரீ ||
. வ ந்த னை . கூ . . . றி . . ம ன . தி . லு . ரு . . த்தியென் ||

; ரி பா ம கா ரிஸ ஸா, ஸப தா | ஸா ; ; ; | ; ; மக மா ||
. வா . யு ற வா . ழ் த்தே . . னே . . . . . இ . தை ||

; பத ஸா ; ; ஸ் நித தா பா | ; பா தா பா | ப ப மக க ஸ ரீ ||
. வந் தே . மா . . . த ரம் . வ ந்தே . மா . . . த . ரம் ||

; தப மக ரிக ரிஸ ஸா, ஸப தா | ஸா ; ; ; | ; ; ; ; ||
. என் று . வ . ண ங் . . கே . னே . . . .



எதிர்வீட்டிலிருக்கிற பெரியவர், 'ஏன் ஸார் நான் கேட்கிறேன், இப்போது நடைபெறுவது சுதந்திர ஆட்சியா? இது நம்முடைய சர்க்கார்தானா? காந்தி கண்டதின் கனவு இப்படியும் முடியுமா? என்ன அக்கிரமம்! என்ன அநியாயம்!! நாம் ரத்தக்கண்ணீர் விட்டு வளர்த்த சுதந்திரக்கொடியை இப்படித்தான் கட்டவேண்டும்; மோட்டாரில் நட்டக்கூடாது; இன்னார்தான் மோட்டாரில் நட்டுக்கொள்ளலாம்; வீட்டிலே அப்படிப் பறக்கவேண்டும்; இப்படிப் பறக்க விடவேண்டும்; கம்பத்தின் நடுவில் பறக்கவிடாதே; இது என்ன அநியாயம் ஐயா? சுதந்திர முதல் ஆண்டு விழாவிலேயே இப்படிக் கட்டுப்பாடுகளா? ஐயா போதும், போதும், என்ன சுதந்திர ஆட்சியோ?' என்று அலுத்துக்கொண்டார்.

சுதந்திரத்தை வாங்கிய நம் தலைவர்களே இப்படிக் கட்டுப்பாடுகள் செய்யலாமா என்பது பெரியவர் அங்கலாய்ப்பு. தாயின் மணிக்கொடி விஷயத்தில் மட்டும் இப்படிக் குறைபடுகிறவர் அல்ல. எதிர்வீட்டில் இருக்கிற அந்தப் பெரியவர் எதற்கெடுத்தாலும் சுயராஜ்யத்தையே காரணம் காட்டுவார். "என்ன அக்ரமம் ஸார், சர்க்கரை வீசை ரூ. 2. என்ன சுதந்திரம் வேண்டியதிருக்கிறது?" என்பார். மாடு தண்ணீர் குடிக்கவில்லையா, சரி சுதந்திரத்தைத் திட்டுவார். காக்கை வலம் பாயவில்லையானாலும் இதே பாட்டு. மோட்டார் கிடைக்கவில்லையா? பால்காரன் தண்ணீர் விட்டு விட்டானா? பேத்திக்கு வரன் கிடைக்கவில்லையா? சுதந்திர நாட்டை வைவார். அவருடைய மனதுக்கு எதிராக எது நடந்தாலும் ஒரு வருஷ காலமாக சுதந்திர இந்தியாவையும் தலைவர்களையும் துச்சமாகப் பேசுவார். தம்முடைய சுக சௌகர்யங்களைப் பாதிக்கிறபோது ஆசாமிக்கு சுதந்திரத்தைப்பற்றி ஒரு பாட்டு பாடத் தோன்றும். இவருடைய வீட்டில், நான் குடியிருக்கிறேன். மாதா மாதம் மூன்று ரூபாய் அதிகம் கேட்கிறார். கேட்கிறதை கடந்த 12 மாத காலமாகச் செய்கிறார். ரசீது என்னமோ அடிமை இந்தியாவில் கொடுத்தபடியே கொடுக்கிறார்!

இது மட்டும் நியாயமா என்று கேட்டால், சண்டைக்கு வந்துவிடுவார். சுதந்திரம் என்பது பிறருடைய பொருளைப் பறிக்க வேண்டுமென்பது இவர் ஏட்டுப்பாடம். பொருள் என்றால், பணத்தில் மட்டுமா? என்னுடைய உரிமைகளையும் பறிமுதல் செய்கிறவர் இவர்.

கடந்த ஒருவருஷ காலமாக **"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு"**......என்ற அடிகள் கிராமபோனில் அலறும். ரேடியோவை உச்ச ஸ்தாயியில் திருகி வைப்பார். என் துக்கத்திற்கும், வேலைக்கும் இவருடைய சங்கீத ரஸனை இடையூறு விளைவிக்கும். நான் ஏதாவது சொல்லிவிட்டால் "ஓய் உமக்கு சங்கீத ஞானம் கிடையாது; பாரதி பக்தியில்லை; ஸ்ரீமதி பட்டம்மாளின் இசையில் கவனமில்லை' என்று காட்டுக் கூப்பாடு போடுவார். மேற்படி மூன்று ரஸனைகளும் என்னிடம் இருப்பதால்தான் நான் மறுக்கிறேன்; இவரிடம் செல்லுகிறேன் என்பதை ஊன்றிப் பார்ப்பது கிடையாது.

சுதந்திர இந்தியாவில் **"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" "வெற்றி எட்டுத் திக்கு மெட்ட"** என்ற இரு இசைத்தட்டுகளையும் கேட்கத் தமக்குப் பரிபூரண சுதந்திரம் உண்டென்று தோள் தட்டுவார். எல்லோரும் ஒன்றென்பதை அவரே வாய்விட்டுக்கத்துவார். அடக்க ஒடுக்கமாகக் கத்துவாரா? உச்சி மீது வானிடிந்து விழுவது போலவே வாசற் கதவை விரியத் திறந்து வைத்துக்கொண்டு கத்துவார். இரவு ஒரு மணி இரண்டு மணிக்கு பி. பி. ஸி. அமெரிக்கா முதலான ரேடியோ நிலையங்களைத் திருப்பி மேல் நாட்டு சங்கீத்தை என் தூக்கத்திற்கு எமனாக ஏவிவிடுவார்......காரணம், தாம் சுதந்திர இந்தியாவில் வாழ்கிறதாகவும் தம்மை யாரும் எதுவும் சொல்லக்கூடாதென்றும், நினைப்பு. சொன்னால் நெற்றியிரட்டைக் கண்ணைக் காட்டுவார்.

இதுபோன்ற ஆத்மாக்கள் நம்மில் பலர் இருக்கிறார்கள். கட்டுபாடுகள் அதிகமாக அதிகமாகத்தான், சுதந்திரத்தின் இனிமை புலனாகும். சிலர் கட்டுப்பாடுகளை, சுதந்திரத்தின் எதிரிகள் என நினைக்கின்றனர். சுதந்திரப் பயிருக்கு பல கட்டுப்பாடுகள் என்ற வேலி தேவை. கொடிக்கு மரியாதையும் கௌரவமும் கொடுக்க வேண்டும், அதை அவமரியாதை செய்யக்கூடாதென்ற எண்ணத்தோடுதான் சர்க்கார் கட்டுப்பாடு செய்கிறார்கள். நம்மை விட நம்முடைய சர்க்காருக்கு மணிக்கொடி மீது உயிர்; இதை மறந்து விடுகிறவர்கள் நண்பரைப்போன்றவர் எத்தனை எத்தனையோ பேர்.

அந்த நாள் ஆட்சியில் நம் அபிப்பிராயங்களை வெளியே சொல்ல முடியாது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய முடியாது. இப்போது மனசில் கொந்தளிக்கும் எண்ணங்களை வெளியிடலாம்; வேலை நிறுத்தம் செய்யலாம். அந்நாளில் தெருவின் எந்தப் பக்கத்திலும் நாம் நடக்கலாம். இப்போது தெரு நியதி என்று கட்டுப்பாடு செய்கிறார்கள். இது யார் நன்மைக்குச் செய்யப்படுகிறது? சமூக நன்மைக்காகச் செய்யப்படும் வேலை.

நேற்று எதிர் வீட்டுக்காரரை "பத்து மைல் வேகத்துக்கு மேலாக கடை வீதியில் போகக் கூடாது" என்று போலீஸ்காரன் எச்சரித்தானாம். நண்பர் தம்முடைய சுதந்திரம் பறிபோய் விட்டதாக அலறிவிட்டு, "மோட்டாரில் ஏன் எண்பது மைல் வேகம் வைத்திருக்கிறான்? மோட்டார் கம்பெனிக்குப் போய், பத்து மைல் வேகத்துக்கு மேலாக ஓடும் மோட்டாரை உற்பத்தி செய்யாதே என்பதாகச் சொல்'' என்னிடம் ஏன் பேசுகிறாய்? என்று போலீஸ்காரனை டோஸ் விட்டதாக அறிவித்தார். போலீஸ்காரன் சுதந்திரத்தின் வேலி; காவலாளி, அவன் நமது உரிமையின் உருவம். அவன் கையமர்த்தி ஸஞ்சார நியதியையும், மோட்டார் வேகத்தையும் கட்டுப்படுத்தாவிட்டால், பூலோகம் சொர்க்கமாகி, எல்லோரும் ஓர் இனம்! ஓர் குலம்! ஆகிவிடுவோம். எங்கும் பிணக்காடு!



சுதந்திரம், சமுகத்திற்காகப் பிறர் சுக சௌகரியத்திற்காக தன் தேவைகளையும் தன்னிஷ்டங்களை தனி மனிதன் குறைத்துக் கொள்வது. எதிர் வீட்டுக்காரருக்கு இசைத்தட்டைக் கேட்பதற்கு உள்ள உரிமை, எப்படியோ அப்படியே அதைக் கேட்காமல் இருக்க எனக்கு உரிமை உண்டு. என் சுதந்திர எல்லைக்குள் அவர் சுதந்திரம் மோதக்கூடாது. திருட்டு என்பது பொருளை மட்டும் அபகரிப்பது அல்ல. பிறர் சுதந்திரங்களையும் அபகரிப்பதே ஆகும். பறிமுதல் என்பது நாட்டுக்கு நாடு, மோசடி செய்யப்படும் செலவாணி மட்டுமா? என் சுக துக்கங்களில் நண்பர் தலையிடக்கூடாது. எனக்கு தகர டின்னில், கம்பை வைத்துத் தட்டுவது பிடிக்குமென்றால், அது நண்பருக்குத் தலைவேதனை. அதைபோல நண்பருக்குப் பிடிக்கிற அம்சங்கள் எனக்குத் தலைவேதனை. சுற்றுப்புறத்திலுள்ள மற்றவர்களுக்கும் ஹிம்சை. ஒரு நாள் போலீஸ்காரர்கள் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வேலை செய்யாமல், சுதந்திர புருஷர்களாக நடக்க ஆரம்பித்தால்? வேலை நிறுத்தம் செய்யாமல், வேலை அதிகம் செய்ய ஆரம்பித்தால்? அன்றோடு, இன்ஷுரன்ஸ் கம்பெனிகள் ஹோகயா! தனி மனிதன் ஆனந்தப்படுகிறதற்காக அக்கம்பக்கத்தார் அழக்கூடாது; தொழிலாளர்கள் பிரச்னைகூட இதிலிருந்து எழுந்தது தானே?

வருங்காலத்தில் தனி மனிதன் சௌக்கியம், இன்பம் எல்லாம் மறைந்து சமுகத்தின் நலனே முக்கியமாகக் கருதப்படும்.

கட்டுப்பாடுகள் அவசியமென்று சொன்னதும் நீங்கள் சிரிக்கலாம். விலைவாசிக்குக் கட்டுப்பாடுகள் ஏற்பட்டபோது நாம் கூக்குரல் இடுகிறோம். அது நீங்கி விட்டது; விலை பத்து மடங்காக விற்கிறது. மீண்டும் கூக்குரல் இடுகிறோம். கட்டுப்பாடுகளில் ஒரு வகை, காற்றுப் போல, அதனால் நமக்குச் சிரமமோ கஷ்டமோ இல்லை. அதன் அழுத்தும் சக்தியை நாம் உணர்வதில்லை. சில ரொம்பவும் பளுவானவை; மிகுந்த கஷ்டங்கள் தருகிறவை. தனிப்பட்ட நபர்களைப் பொருத்தவரை, காற்றுப்போன்ற லேசான கட்டுப்பாடுகள் நன்மையே செய்யும். அரசாங்கத்தில் பளுவான கட்டுப்பாடுகள் இருக்கும். அதைக் குறை சொல்ல நமக்கு சுதந்திரம் இருக்கும்வரை, பளுவான கட்டுப்பாடுகளும் காற்றுப்போல சுலபமாகும். வாய்ப் பூட்டுப் போட்டுவிட்டால்தான் நமது சுதந்திரம் பறி போய்விட்டது, அதுவரை எந்தக் கட்டுப்பாட்டையும் தடையையும் சுலபமாக்கிக் கொள்ளலாம்.

நம் முன்னோர்கள் தத்தம் இஷ்டப்படி நடந்தார்கள்; யாரும் கையமர்த்தி நிறுத்தவில்லை. செத்தார்கள், பிறந்தார்கள் என ஜனன மரணத்தை பதிய வைக்கும்படி யாரும் கட்டுப்பாடு செய்யவில்லை. அம்மை வார்த்து கொடிய தொத்து நோய்க்கு ஆளானார்கள். யாரும் ஊசி மருந்து குத்த வேண்டுமென நோட்டீஸ் விடவில்லை. கட்டடங்கள் கட்டினார்கள்; பிளான் அனுப்பி அனுமதி கோர வேண்டியதில்லை. இந்தக் காலத்தில் முன்னோர் வாழ்ந்த வாழ்வை நாம் வாழவில்லை. ஆகவே அவர்களுக்கு இல்லாத சௌகரியங்கள் எத்தனையோ நமக்கு இருக்கின்றன. வண்டி, மாடு, வைக்கோல் சுருணை, கட்டுச் சாதம் சகிதம், நாலு நாள் பயணம் போய் செய்கிற காரியத்தை ஒரு அரையணா கார்டு செய்துவிடுகிறது. கால நிலை மாற மாற, கட்டுப்பாடுகள் பிறந்துகொண்டே இருக்கும். சுதந்திர சூரியனின் நிழலில் கட்டுப்பாடு என்ற வெண்ணிலா ஒளி வீசும்.

ரயிலில், மோட்டாரில், கோழி, புரு, பிரயாணிகள் தம்மோடு எடுத்துச் செல்லக் கூடாது. ஏன்? பிரயாணிகளின் நோய் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பரவலாம். பூனை, மைனா, கிளி, நம்மோடு பிரயாணம் செய்தால் அசிங்கம் ஏற்படும். பிறருக்கும் ஹிம்சை. பொதுவாக, ஒரு காரியம் பல மனிதருக்கு இடைஞ்சல் என்று தெரிகிறபோது அதைத் தடைசெய்வது அவசியம். கடை குமாஸ்தாக்கள், காலை 3 மணி முதல் 7 வரையும், மாலை 10 முதல் 1 மணி வரையுமே வேலை பார்க்க முடியுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தால், அது சமூகத்திற்கு ஒவ்வாத நேரம். சமூகத்திலுள்ள பெருவாரியான ஜனங்களின் தேவையை உத்தேசித்து கடைக்காரர்கள், தங்கள் சுதந்திரத்தை விட்டுக்கொடுத்து காலை 8 முதல் 12, மாலை 4 முதல் 8 என்று வைத்திருக்கிறார்கள்.

இப்படியே மனிதனுக்கு மனிதன், தொழிலுக்குத் தொழில், நாட்டுக்கு நாடு சுதந்திரமாக நடக்கும் விஷயத்தில், தனது சுதந்திரத்தில் ஒரு பகுதியை விட்டுக் கொடுத்து மற்றவனுக்கு உரிமை அளிக்கிறது. நமக்குத் தொல்லை தரும் தடைகளை அகற்றக் கூக்குரல் போடும் நாம் பிறருக்குத் தடையாக இருக்கக்கூடாது.

நமது அன்றாட வாழ்க்கையில் தியாகங்கள் நடைபெறுவதில்லை. விடுதலைப் போர்கள் நிகழ்வதில்லை. இவை நாட்டைப் பொறுத்து எப்பவோ நடைபெறும் பூகம்பம். அந்யோன்யமாக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் பழகும் சம்பவங்களே அன்றாடம் குறுக்கிடுகின்றன. மோட்டாரில், ரயிலில், சினிமாக் கொட்டகையில், நாம் மனிதத் தன்மையோடு நடந்துகொண்டால், நமது பொறுப்பை உணர்ந்துகொண்டால் எல்லாம் சரியாக நடக்கும். பிறர்க்குள்ள பொறுப்பை நாம் சிந்தனை செய்து அதைச் செய்யும்படி தூண்டுவதைவிட நாம் நமது பொறுப்பை உணர்ந்தால்..........?

அவரவர்களுடைய பொறுப்பிலிருந்து விலகிச் செல்லுகிறோம். கடிகாரத்தில் ஒரு சக்கரம் ஓடாமல் மற்றவை ஓடினாலும் முள் நகராது. மணி பார்க்கிறதில் குளறுபடி. முதலாளியைக் குறை கூறி தொழிலாளி தூங்குவதும், தொழிலாளி மீது குறை கூறி முதலாளி தூங்குவதும்,

தேவலையே!



"என்னா! ஒரு பதினைஞ்சு ரூபா இருந்தா கொடுங்கோ! ஒங்க சம்பளம் வந்ததும் திருப்பி கொடுத்துடறேன்,,,...!"

சுதந்திரத் திருநாள்

★ நெற்குப்பை ராமசுப்பிரமணியன் ★

★

ஈக்கள் பலசேர்ந் தினியதேன் கூட்டை
ஆக்கும் தன்மைபோல் அநேக தலைவர்

சேர்ந்துரு வாக்கிய தேசச் சுதந்திரம்!
தேர்ந்ததை உலகில் செழிப்புறச் செய்வோம்!

வசித்திட வீடு மக்களுக் கவசியம்!
புசித்திட உணவு பொருந்தும் அவ்விதம்!

ஈட்டிய சுதந்திரம் என்றும் வாழ்கென
நாட்டுவோம் கொடியை! நந்த போற்றுவோம்!

உடையின் கஷ்டமும், உணவின் கஷ்டமும்
கடிதினில் ஏகக் கடமைகள் புரிவோம்!

சென்ற சுதந்திர தினத்தி லிருந்து
இன்று வரைக்கும் எத்தனை தொல்லையோ?

உத்தமன் காந்தியின் உயிரைக் கொடுத்துச்
சித்தம் கலங்கினோம்! தீமை கொஞ்சமோ?

கதிகலங் கிடச்செய் காஷ்மீர்த் தொல்லைகள்
கதிர்முன் பனிபோல் கடிதினில் ஏகவே!

இதுபோல் இன்னல்கள் இனிவரா திருக்கச்
சுதந்திர தினத்தில் துதிப்போம் இறைவனை!

(முன்பக்கத் தொடர்ச்சி)

வாசகர்கள் மீது வம்பு சொல்லி ஆசிரியர் பிரசுரம் செய்தும், ஆசிரியரைக் குறைத்துச் சொல்லி வாசகர்கள் வாழ்வதும், மக்களைக் குறை சொல்லி, அரசாங்கம் நடப்பதும், அரசாங்கத்தைத் தூற்றி மக்கள் நடப்பதும் எதனால்? நாம் ஒருவன் மட்டும் சரியாக நடக்க வேண்டுமா? என்ற மனப்பான்மை. இம் மனப்பான்மையைத் தொலைத்தால்?

கள்ள மார்க்கெட் நடைபெறுமா? ஒன்றுக்குப் பத்தாக விலை ஏறுமா? லஞ்சமும், ஒழுங்கீனமும் நடைபெறுமா? வேலை நிறுத்தங்கள், கலகங்கள், நிகழுமா? நமது சர்க்காரை நாமே குறைகூறுவோமா? மாட்டோம். இன்றைய குழப்பத்திற்குக் காரணம், பிறரிடம் குற்றமில்லை.



'ஏண்டா பாபு! பேப்பர் வாங்கிண்டு வாடான்னா, ஏதுக்கடா முனியனை கூட அழைச்சிண்டு போறே?......' ''இன்னிக்கு 'சுதந்திர மலர்' அப்பா. பேப்பரை என்னாலே தூக்க முடியாது''

என்னிடம் இருக்கிறது. உங்களிடம் இருக்கிறது. நம்மெல்லோரிடமும் குற்றம் குறை இருக்கின்றன. இந்தக் குழப்பங்களை நாம் ஒவ்வொருவரும் அவரவர் குறைகளை நீக்கிவிட்டால் உண்மையில் தேனும், பாலும் கலந்தோடும் நாடு இதுவே. அதுவே பசையுள்ள சுதந்திர நாடு.

உங்கள் காலபலன்

மேஷ ராசி

(அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

மேஷராசிக்காரர்களுக்கு நல்லதும் கெட்டதும் கலந்து கட்டியாக வரும் மாதமிது. ஆகஸ்டு மாதம் 21-ந் தேதி வரையில் உத்தியோகம், குடும்பம், பணம் ஆகிய அனைத்திலும் பூர்ணமாகக் கவலைகளிருந்து வரும். இவைபற்றித் தீவிரமாகக் கவனம் செலுத்தும்படியிருக்கும். பண விவகாரங்களுக்கு இரண்டாம் பகுதி அபிவிருத்திகரமானது. இந்த ராசிக்காரர்களில் சிலருக்கு குழந்தை பிறப்பதற்கு இடமுண்டு. இரண்டாம் பகுதியில் தேக அசௌக்கியமேற்படக் கூடும். ஊழியர்களாயிருப்பவர்கள் தற்காலிகமாக கடன் வாங்கிப் பணத்தைப் புரட்டும்படியாக ஏற்படக்கூடும். இது தவிர்க்க முடியாததாகவிருக்கும். இந்த மாதத்தில் இந்த ராசிக்காரர்கள் சிலருக்கு ஒரு பிரயாணம் நேரவும் இடம் உண்டு. உறவினர்களுடன் தப்பு அபிப்ராயமோ அல்லது தகராறோ வைத்துக்கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இம்மாத பிற்பகுதியில் மாமாவோ அல்லது அந்த ஸ்தானத்திலுள்ள உறவினர் ஒருவரோ இந்த ராசிக்காரர் ஆச்சர்யமுறும் வகையில் நடந்து கொள்வர். குரு 8-வது இடத்திலிருப்பதிலிருந்து ராசிக்காரர்களுடைய விவகாரங்கள் எல்லாம் பொதுவாக திருப்திகரமாயிராதெனத் தோன்றுகிறது. 7-வது இடத்தில் செவ்வாய் பெற்றிருக்கும் ஸ்தானம் காரணமாக யாரேனும் ஒருவர் நியாய விரோதமாக எதிரிடையாக விருப்பார்கள். முன் பின் யோசியாமல் உணர்ச்சி மேலெழும்படியாகவும் நேரும். ஆனால் எந்த சந்தர்ப்பத்திலும் நிதானத்தைக் கைவிடாமல் நடந்து கொள்வது நலம். வெளிப் பழக்கங்களிலுள்ள வசதிகள் சுமாராக விருக்கும். சில இனங்களில் மணமகளின் பிரச்னை முன்னணியிலிருக்கும். வியாபாரிகளானால் அவர்களுக்குக் கூட்டாளி முறையிலும் ஹேஷ்யத்திலும், லாபம் கிடைக்க இடமுண்டு.

முதலாளிகளுக்கும் ஊழியர்களுக்கும் அபிப்ராயபேதம் ஏற்படும். அதேபோல தந்தைக்கும் தனயனுக்கும் அபிப்ராயபேதம் உண்டாகலாம்.

> 1948-ம்௵ ஆகஸ்ட்மீ 17உ முதல் செப்டம்பர்மீ 16உ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்து கொள்வதற்குதவியாக நட்சத்திரங்களும், பாதங்களும் பக்கத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆகஸ்ட் 19-ந் தேதி இவர்களுக்கு உகந்ததல்ல. ஆகஸ்ட் 17, 22, 24, 25, செப்டம்பர் 2, 3, 6, 10, 12 தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்டகரமான தினங்கள்.

விருஷப ராசி

(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

சென்ற மாதத்தைவிட விருஷப ராசிக்காரர்களுக்கு இம்மாதம் பிரகாசகரமாக விளங்கும். செய்யும் வேலையில் மாறுதலிருக்கும். இந்த ராசியில் அநேகருக்கு மாற்றம் ஏற்படும்: அல்லது இருக்கும் ஜாகையிலேனும் மாற்றமேற்படக்கூடும். மேலதிகாரிகளின் ஆதரவின்மை மறைமுகமான அனுகூலமாகப் பிரதிபலிக்கும். முக்கியமாக இரண்டாம் பகுதியில் குழந்தைகளால் மிகுந்த கவலை ஏற்படும். மனைவி அல்லது புருஷனின் தேகாரோக்கியம் பாதிக்கப்படும். வீடு விற்பனை அல்லது வாங்குவது போன்ற நிகழ்ச்சி இம்மாதத்தில் பிரத்தியோகமாகயிருக்கும். தாயாரின் தேக நிலைமை அபாயகரமாக விருக்கும். ஸெக்யூரிடிகளில் பணம்போடநேரலாம். பண விஷயத்துக்கு இரண்டாம் பகுதி வெகு சிரேஷ்டம். ஸெப்டம்பர் இரண்டாம் பகுதியில் சுக்கிரன் கடகத்துக்குப் போவதால் ஒரு யாத்திரை ஏற்படுமெனத் தோன்றுகிறது. இது கடல்கடந்து செல்லும்படியான பிரயாணமாகவுமிருக்கலாம். நண்பர்களில் சிலர்

விரோதிகளாவார்கள். சுற்றத்திலிருப்பவர்கள் இந்த ராசிக்காரர்கள் விஷயத்தில் கபடமாக நடந்துகொள்ளலாம். எனவே பிறரோடு பழகும்போது உஷாராயிருக்கவேண்டும். இந்த ராசியைச் சேர்ந்த நண்பர்களோ பிறர் முன்னிலையில் இவர்களைக் கைவிட்டுவிடுவார்கள். அநுசரணையாகயிருக்கும் சுந்தர்ப்பத்திலும் நண்பர்களிடம் உதவியை எதிர்பார்க்க முடியாது. குடும்பத்தில் சந்தோஷமாகவிருக்க முடியாது. குழந்தைகளால் கவலைகள் ஏற்படும். வாகனங்கள் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அவற்ருல் அதிருப்தி ஏற்படும். வியாபாரிகளுக்கு இரண்டாம் பகுதி தான் நல்லது. கடிதப் போக்குவரத்து வியாபார விஷயங்களில் லாபகரமாயிருக்கும். பெரியவர்களோடு அபிப்ராயபேதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். புதிய வியாபாரங்களை விலக்க வேண்டும். பழைய வியாபாரம், பழைய வாடிக்கைக்காரர்கள் இவர்களே இம்மாதத்தில் முக்கியஸ்தர்களாயிருப்பார்கள். மனைவி அல்லது புருஷன் இவர்களில் யாரேனும் ஒருவரின் தேகாரோக்கியம் இரண்டாம் பகுதியில் பாதிக்கப்படும். தவிர்க்க முடியாதபடி செலவு அதிகமடையும்.

ஆகஸ்ட் 17, 24, 26, செப்டம்பர் 2, 6, 9, 12 தேதிகள் இவர்களுக்கு விசேஷம்.

மிதுன ராசி

(மிருகசீரிஷம் 3-ம்பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.)

இப்போதுதான் சனியின் $7\frac{1}{2}$ வருஷ சுற்று முடிவடைந்திருக்கிறது. எனவே இனிமேல் பிரகாசமான சக்திகள் மிதுன ராசிக்காரர்கள் விஷயத்தில் பிரதிபலிக்கும். அதிருஷ்டமும் இவர்கள் திக்கை நோக்கித் திரும்பும். சென்ற $2\frac{1}{2}$ வருஷ காலமாகச் சுணங்கும்படியிருந்த நிலைமையிலிருந்து விடுபட முடியும். நல்ல தசை நடப்பில் உள்ளவர்களுக்கு சகல துறைகளிலும் அபிவிருத்தி உண்டு. இது முதல் பண விவகாரங்களில் விசேஷ அபிவிருத்தி ஏற்படும். முக்கியமாக அடுத்த அக்டோபர் முதற்கொண்டு இந்த அம்சம் இன்னும் வலுப்படும். குழந்தைகள விஷயத்தில் அதிருஷ்டகரமான நிலைமையிராது. இம்மாதத்தில் சிநேகத்தைவிட விரோதமே அதிகம். குடும்பத்தில் கிட்டிய பந்துக்களுடன் சந்தோஷமாக வாழ முடியாது. உறவினரில் ஒருவருக்கு தேகாரோக்கியமிராது. இதனுல கவலைகளேற்படும். உத்தியோகத் துறையில் நல்ல காலத்துக்காகக் காத்திருக்கவேண்டும். இவ்விஷயத்தில் ஏமாற்றம் ஏற்படக்கூடும். சிலருக்கு ஒரு பிரயாணமோ அல்லது மாற்றமோ ஏற்படலாம். முதல் பகுதியில் தேகசுகம் திருப்திகரமாயிருக்கும். அனுகூலத்தைத் தரும் வகையில் இரண்டாம் பகுதியில் குடும்பத்தில் மாறுதலோ அல்லது வேறு அபிவிருத்தியோ ஏற்படும். பணக்காரர்களாலுல் நிலத்தின் மீதோ அல்லது வீட்டின் பேரிலோ பண முதலீடு செய்ய நேரலாம். வியாபாரிகளுக்கு லாபகரமாயிராது. இரண்டாம் பகுதி சிறிதளவு சாதகமாயிருக்கும். எந்த நிலைமையிலும் முரட்டுத்தனமான ஹேஷ்யங்கள் கூடாது. இம்மாதத்துவக்கத்தில் கடிதப்போககுவரத்து மகிழ்ச்சிகரமாயிராது. இரண்டாம் பகுதியில் மகிழ்ச்சிகரமாயிருக்கும். ஏற்கனவே கண் உபாதி உள்ளவர்களுக்கு அத்தொந்திரவு அதிகரிக்கும். திடீரென்று புதியதொரு நட்பு ஏற்படும். ஆனுல் இது நீடித்து நிலைக்காது. இந்த சிநேகத்தால் பயனுமேற்படும்.

ஆகஸ்ட் 17, 25, 27, செப்டம்பர் 2, 5, 6, 9, 11, 14 தேதிகள் இவர்களுக்குத் தரமானவை.

கடக ராசி

(புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

சகல விஷயங்களையும் சேர்த்துப் பார்க்கும்போது, கடகராசிக்காரர்களுக்குக் காலபலம் நல்லதாகவேயிருக்கும். குரு, சூரியன், சுக்கிரன் இவர்கள் ஸெப்டம்பர் மாத முதல் பெறும் ஸ்தான விசேஷம் இந்த ராசிக்காரர்களுக்கு முக்கியமாக விளங்கும். இதனுல் பண வசதிகளேற்படும். எதிர்பாராத பண உதவிகிட்டும் எடுத்த காரியங்களில் எல்லாம் வெற்றியேற்படும். உத்தியோக உயர்வு இம் மாதத்தில் உண்டு. நண்பர்கள், நட்பு இவ்விரு அம்சங்களுக்கும் மகோன்னதமான மாதமிது. முன்னிருந்ததைவிடக்குடும்ப சுகம் அபிவிருத்தியடையும். நேரிடையாகப் பார்க்கும்போது நஷ்டமேற்படுவதுபோல் தோன்றினுலும், நண்பர்களால் மறைமுகமாக அனுகூலம் உண்டாகும். கண்பார்வை பலவீனமாயிருப்பவர்கள் வேறு கண்ணுடி அணியும்படி ஏற்படலாம். மற்றவர்களுக்குத் தற்காலிகமாக கண்ணில் கோளாறு ஏற்படலாம். இரண்டாம் பகுதியில் செலவு மிகவும் ஏறும். இரண்டாம் பகுதியில் மாமாவுக்கோ அல்லது அவ

1948-ம் வருஷம் ஆகஸ்டுமீ 17-ந்தேதி காலையிலுள்ள கிரஹ நிலைமை.

	ராகு		சுக்கிரன்
சந்திரன்	-		புதன் சனி சூரியன்
	குரு	கேது	செவ்வாய்

ரைப்போன்றவர்களுக்கோ உதவி புரிய நேரும். இல்லையாயின் உதவி கோர நேரும். ஒரு பிரயாணமும் சித்திக்கலாம். கடிதப்போக்குவரத்து லாபகரமாகவும், தூர பந்துக்களிடமிருந்து சந்தோஷ சமாசாரத்தைக் கொண்டு வருவதாயும் இருக்கும். இரண்டாம் பகுதியில் சிறிய அளவில் உத்தியோகம் உயரலாம். தேகாரோக்கியம் திருப்திகரமாயிருக்கும். புதிதாகக் கல்யாணமானவர்களுக்கு இது ரொம்ப சந்தோஷமான சமயம். மாப்பிள்ளைகளுக்கு லாபம் கிட்டும். வியாபாரிகளுக்கு நிலைமை இம்மாதம் திருப்திகரமாகவே இருக்கும். முதல் பகுதியைவிட இரண்டாம் பகுதி மிக்க லாபகரமாகும். ஒரு தரகர் மூலமாகவோ அல்லது ஒரு நல்ல நண்பர் மூலமாகவோ வியாபாரத்தில் பண ஏமாற்றமேற்படும். எப்படியாவது கடன் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். இரண்டாம் பகுதியில் புதிய வியாபாரத் தொடர்புகளை அநுகூலம் தரத்தக்க முறையில் ஸ்தாபித்துக் கொள்ளலாம். இந்த ராசிக்காரர்கள் தம் வசம் உள்ள சகலவிதமான சக்தியையும் பிரயோகித்து போட்ட திட்டத்தை நிறைவேற்ற முனையவேண்டும். அப்படியானால் வெற்றி நிச்சயம்.

ஆகஸ்டு 17, 22, 24, 25, செப்டம்பர் 2, 3, 6, 12 தேதிகள் இவர்களுக்கு சிரேஷ்டம். 19–ந் தேதி நல்லதல்ல.

ஸிம்ம ராசி

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.)

இப்போது ஸிம்ம ராசிக்காரர்களுக்கு 7½ வருட சனியின் இரண்டாம் கட்டம். இதனுல் வாழ்க்கை சந்தோஷமாகவிருக்காது, திருப்தியுமிராது. குடும்பம், உத்தியோகம், ஆகியவற்றில் மனச் சுணக்கம்தான். சனி இவர்களுக்கு இரண்டாம் சுற்ருக இல்லாவிட்டால் எந்தக்காரியமும் சுலபமாக நடந்து வராது. லக்னத்தில் சூரியனுடன் சனி இருப்பதால் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படும். மனைவி கஷ்டப்படும்படிவிருக்கும். அல்லது பெரியவர் தப்பு அபிப்ராயம் கொள்ள நேரும். வேலைக்காரர்கள் அளவிற்கதிகமாக சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வர். அவர்களால் கஷ்டப்பட நேரும். அவர்களிடம் அளவிற்கதிகமாக அன்பு செலுத்தக் கூடாது. பண விஷயத்திற்கு இரண்டாம் பகுதி தரம். இதற்கிடையில் செலவு படுகடுமை. சிலருக்கு இம்மாத இரண்டாம் பகுதியில் பிரயாணம் ஒன்றும் நேரும். குழந்தைகள் விவகாரம் சரியானபடி உருவடையும். சகோதரர் ஒருவராலோ, அல்லது உறவினர் ஒருவராலோ ஏதேனும் கவலைகள் ஏற்பட்டுவரும். நண்பர்கள் இந்த ராசிக்காரர்களுக்கு விரோதமாகவிருப்பார்கள். அவர்களிடமிருந்து உதவிபெற இரண்டாம் பகுதி சிரேஷ்டம். ஏழைகளானுல், இம்மாத ஆரம்பத்திலேயே பணம் கடன் வாங்குவது தவிர்க்க முடியாமல் போகும். வியாபாரிகளுக்கு இம்மாதம் அதிர்ஷ்டகரமானதன்று. எந்த ஹேஷ்யமாகட்டும் நஷ்டம்தான் காணப்படுகிறது. ஒருகால் இரண்டாம் பகுதியில் உபாயமாக லாபத்தைத் தருவதாகவிருக்கலாம். ஏற்கனவேயுள்ள கூட்டு ஓரளவு மாறுதலைப்பெறும். இதற்குக்காரணம் கூட்டாளியுடன் கொள்ளும் மனஸ்தாபமே. ஸ்திரீ மூலமாக ஏமாற்றமோ அல்லது ஓர் கோளாறோ ஏற்படும்.

ஆகஸ்ட் 17, 22, 24, 25, 27 செப்டம்பர் 2, 6, 11. 12, இவை உத்தமமான தினங்கள்.

கன்னியா ராசி

(உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய.)

கன்னியா ராசிக்காரர்களுக்கு கஷ்டகாலம் ஆரம்பமாகும் மாதிரியில் சனி பிரவேசிக்கிருர். குடும்பக்கோளாறு, பண நெருக்கடி, எதிரிகளது திரிசமன்கள் இவற்ருல் எரிச்சல் ஏற்படும். இது முதல் இன்னும் 2½ வருடகாலத்திற்கு செலவு. இந்த ராசிக்காரர்களது ஜீவநாடி, தேக அசௌகரியத்தாலோ அன்றி பண விஷயத்திலேற்படும் தர்ம சங்கடங்களாலோ மனவேதனை ஏற்படும். பண சம்பந்தமான விஷயங்களில் முரட்டுத்தனமாக நடந்துகொள்ளக்கூடாது. இல்லாவிடில் ஏமாற்றமும், துயரமும் ஏற்படும். கிட்டியபந்துக்களாலும், உறவினர்களாலும், ஊழியர்களாலும், உபத்திரவங்கள் உண்டாகும் என காண்கிறது. ஒரு தூரப் பிரயாணமும் ஏற்படலாம். குழந்தைகள் விஷயத்திஞல் திருப்தி இராது. குழந்தைகளில் ஒருவரால் இம்மாதம் சற்று கவலைப்படும்படி விருக்கும்.

இரண்டாம் பகுதியில்தான் பணமுடை தீரும். இரண்டாம் பகுதியிலேயே ஓர் ஸ்திரீயின் மூலம் லாபமுண்டு. முதற்பகுதியில் தேக சுகமிராது. இரண்டாம் பகுதியில் கடன் வாங்கக் கூடாது. இம்மாதத்தில் இருக்கும் வீட்டைப்பற்றி ஏதேனும் அதிருப்தி ஏற்படலாம். உத்யோகத்தில் மன நிம்மதியிராது. பாராட்டில்லாமல் வேலையின் பளுவு அதிகமாகும். வியாபாரிகள புதிய வியாபாரங்களில் ஈடுபடாமல் விலகி நிற்பது நலம். ஏனெனில், நஷ்டம் சர்வ நிச்சயமாக ஏற்பட்டுவிடும். இரண்டாம் பகுதியில் இந்நிலைமை ஓரளவு அபிவிருத்தி அடையலாம். ஊழியர்களால்முதலாளிகளுக்குஉபாதிதான்.தொலைவிலுள்ளவியாபாரத்திஞல் பண லாபம் ஏற்படும். சில இனங்களில் ஏதாவது சுப காரியங்கள் நிகழலாம். புதிய வாடிக்கைக்காரர்களும்ஏற்படுவர். புதியதாக ஞான விசேஷமும் உண்டாகும். இவை இரண்டாம் பகுதியில் நிகழக்கூடியன. கல்யாணமானவர்கள் வேட்டகத்தின் மூலம் லாபமுறுவார்கள்.

ஆகஸ்டு 17. 24, 26. செப் 2, 6, 11, 12 தேதிகள் அநுசரணையானவை.

துலா ராசி

(சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.)

மூன்று கிரகங்கள் 11–வது இடத்தில் இருந்தபோதிலும்கூட துலா ராசிக்காரர்களுக்கு இம்மாத முதற் பகுதி சாதகமாயிராது. இந்த ராசிக்காரர்களது முயற்சிகள் வெற்றியைத்தராது. கொண்ட அபிலாஷையில் ஏமாற்றம்தான். நண்பர்கள், உறவினர்கள் இவர்களாலும் ஏமாற்றமே. கிட்டிய பந்துக்களுடன் உள்ள உறவு சவுஜன்யமாயிராது. பண

முடை தீவிரமாயிருக்கும். கீழ்த்தர ஜனங்களால் கோர்ட் கோளாறுகள் ஏற்படும். சில இனங்களில் திருட்டுக்கூட ஏற்படும். நம்பிக்கைக்குப் பாத்திரமாக உள்ள நண்பர்கள் இவர்களுக்கு விரோதமாகத் திரும்புவார்கள். இரண்டாம் பகுதியில் இந்த ராசிக்காரர்களது விவகாரங்களில் ஓர் திருப்தி ஏற்படும். செலவு அதிகரித்து நல்ல காரியங்களில் செலவிட நேரும். உத்தியோகத்திலும், பண விஷயத்திலும் அபிவிருத்தி ஏற்படுமென காண்கிறது. முதல் பகுதியில் எதிர்பாராத நஷ்டம். இரண்டாம் பகுதியில் தான் எதிர்பாராத லாபம். கூட்டு வியாபாரம் தகராறில் முடியும். அதனால் தற்காலிகமான சச்சரவு ஏற்படும். சிலருக்கு தசாபுக்தியைப் பொருத்து அடியோடு பிரிந்துபோக நேரிட்டாலும் நேரும். கல்யாணமாகாதவர்கள் பெண்ணைப் போய்ப் பார்க்க கூடும். இது இம்மாத இரண்டாம் பகுதியில் புதிய வியாபாரத் தொடர்புகள் லாபகரமாக ஏற்படுத்திக் கொள்ளலாம். புதிய வாடிக்கைகாரர்கள் இரண்டாம் பகுதியிலேற்படுவார்கள். குழந்தைகளால் மன நிம்மதியிராது. இம்மாத முதற்பகுதியில் நிலைமை பிரகாசமாக விருப்பதுபோல் தோன்றுமேயல்லாது போகப் போக ஏமாற்றந்தான். 12-ல் செவ்வாயும் 11-ல் உள்ள கிரகங்களாலும் திருட்டு போவதற்குக்கூட இடமுண்டு. மேலதிகாரிகளின் ஆதரவைப்பெறவும், நிலம் அல்லது வீடு, இவற்றின் அபிவிருத்தியைப் பற்றிய பிரச்னைகளுக்கும் இம்மாத இரண்டாம்பகுதி விசேஷம்.

ஆக 17, 24, 25, செப், 2, 3, 6, 10, 12 இவர்களுக்கு உன்னதமான நாட்கள்.

விருச்சிகராசி

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

இந்த ராசிக்காரர்களுக்கு சனி 10-ம் இடத்தில் இருப்பதால் உத்யோகத்திலும் குடும்பத்திலும் மன அமைதி பாதிக்கப்படும். அநேகருக்கு உத்யோகத்தில் விசேஷ மாறுதல் இருக்கும்; அல்லது தசாபுக்திக்கு ஏற்றுப்போல செய்யும் உத்தியோகத்தில் மாறுதல் ஏற்படும். மக நட்சத்திரத்தின் முதல் கரணத்தில் சூரியன் வரும்போது ஏதாவது தடங்கல் அல்லது ஏமாற்றமேற்படும். விரும்பத்தகாதவர்களின் சேர்க்கையை விலக்கவேண்டும். இல்லையானால் இதுவரையில் அபிமானிகளிடம் இருந்துவந்த நன் மதிப்பு பாதிக்கப்படும். முதியவர்களுடைய அபிப்ராயத்தை சுய மதிப்புக்கு விரோதமுண்டாகும்படி மீற நேரும். பெற்றோர்போலவிருக்கும் உறவினர்கள் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது மனதுக்குப் பிடிக்காது. முதலாளிகளாயிருப்பவர்கள தங்கள் சிப்பந்திகளைச் சரிவர நிர்வகிக்க முடியாமல் போகும். மனைவியின் தேக ஆரோக்கியம் பாதிக்கப்படும், அல்லது புருஷனின் போக்கு மிகுந்த வியாகூலத்தைக் கொடுக்கும். வியாபாரிகளாயின் முதல் பகுதியில் திடீரென்று லாபம் கிடைக்க வழி உண்டு. இச்சமயத்தில் புதிய வாடிக்கைக்காரர்களின் ஆதரவேற்படும். இரண்டாம் பகுதியில் செலவு மிகக் கடுமை. கடன் வாங்குவதற்கான அவசியமும் ஏற்படலாம். பெற்றோர்களுக்கு முக்கியமாகத் தகப்பனுருக்கு இச்சமயத்தில் கஷ்டம். முதல் பகுதியில் வீடு மாற்றக்கூடாது. கார் சொந்தக்காரர்களானுல் அவர்களது வண்டி மிக்க சங்கடத்தைக் கொடுக்கும். இந்த தருணத்தில் வியாஜ்யங்களில் இறங்கினுல் அவை நன்கு முடியாது.

ஆகஸ்டு 17, 25, 26, ஸெப்டம்பர் 2, 6, 9, 10 தேதிகள் இவர்களுக்கு நலம்.

தனுர்ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய.)

குடும்பத்திலுள்ளவர்களுடன் இம்மாதம் ஏதேனும் தகராறுகள் கொள்ளும்படி தனுர் ராசிக்காரர்களுடைய கிரஹ நிலை அமைந்திருக்கிறது. சடங்குகளை உத்தேசித்துப் பலமான செலவுகள் செய்ய நேரும். பண முடை தீவிரம்: வருமான இனம் சிறிது காலம் வரை வரட்சையாகவேயிருக்கும். சகோதரருடன் உள்ள உறவு கெடும். ஒரு வியாஜ்ஜியம் ஏற்படும்; ஆனுல் சீக்கிரமாக முடியும் பட்சத்தில் முடிவு திருப்திகரமாயிராது. குழந்தைகளைப் பற்றி ஏதேனும் கவலைகள் ஏற்படும். இந்த ராசியுள்ள சிலரது மனைவி கருத்தரிக்கலாம். மன நிம்மதிக்கு இரண்டாம் பகுதி ஏற்றது. சகவாசதோஷத்தால் நேர்மையற்ற செய்கைகளைப் புரியவும் நேரும். பண விஷயத்துக்கும் இரண்டாம் பகுதியே விசேஷம். மேலதிகாரிகளின் ஆதரவுகிட்டுவது ஒத்திப்போகும். சர்க்கார் உத்தியோகத்திலிருப்பவர்களானுல் மாற்றத்துக்காக முயன்ருல் வெற்றி உண்டு. குமாரர்களில் ஒருவர் முன்னணிக்கு வந்து ஆச்சர்யத்தை தவிளைவிக்கலாம்.

இரண்டாம் பகுதியில் மட்டும் வியாபாரிகள் தூரதேச வியாபாரத்தில் ஈடுபட்டால் வெற்றிகாண்பர். கடிதப்போக்குவரத்தைக் கொண்டு அயல் நாட்டு வியாபாரத்தை விஸ்தரித்துக்கொள்ளலாம். முதல் பகுதியில் பாங்கி அலுவல்கள் சுலபமாயிராது. கைவசமுள்ள சரக்கு சிலநாள் வரை முடங்கிப்போகும். இதனுல் சற்று நஷ்டம் ஏற்படும்.

ஆகஸ்ட் 21, 24, 25, 30 ஸெப்டம்பர் 2, 3, 9, 10, 12 தேதிகள் இவர்களுக்கு மேன்மையானவை.

மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம்பாதம் முடிய.)

8-வது இடத்தில் சனி இருப்பது மகர ராசிக்காரர்களுக்கு அநுகூலமானதல்ல; மங்களகரமானதுமன்று. முக்கியமாக இம்மாதத்தில் தென்படக்கூடிய விஷயங்கள்இரண்டு. ஒன்று அதிருப்தி. இரண்டாவதாக அனுவசியமான கவலை. பிறருக்கு உபதேசம் செய்ய வேண்டாம். ஏனெனில் இதனுல் எல்லையில்லாத விவாதமும், மனஸ்தாபமும்தான் ஏற்படும். இறுதியில் பழியைச் சுமக்க நேரும். பண விஷயத்தில் நிலைமை ஒரேமாதிரியிராது. குடும்ப, வெளியிட வாழ்க்கைகள் சுகப்படாது. உத்தியோகத்தில் மாறுதலேதாவது ஏற்படக்கூடும். தேகாரோக்

கியம், பணம் இவை இரண்டிலும் இம்மாதம் குறைகள் இருந்து வரும். ஜீரண சக்தியில் கோளாறு ஏற்படும். ஒரு தூர தேசப்பிரயாணம் சம்பவிக்கலாம். ஆனால் இச்சமயத்தில் உடம்பைப் பார்த்துக்கொள்வதவசியம். ஏற்கனவே கண் உபாதை உள்ளவர்களுக்கு அவ்வுபத்திரவம் முற்றி மோசமான நிலைமை ஏற்படும். கண்ணுடியை மாற்றும்படியாகவோ அல்லது ஆபரேஷன் செய்துகொள்ளும்படியாகவோ நேரும். ஆபரேஷன் செய்துகொள்வதென்பது முற்றிய இனங்களில் மட்டும் தான். வயோதிகர் ஒருவர் குடும்ப வட்டாரத்தில் காலமாகலாம். கடன் வாங்குவதோ கொடுப்பதோ தவிர்க்கப்படவேண்டும். ஆபீஸ் விவகாரங்களில் இரண்டாம் பகுதியில் சற்று அபிவிருத்தி காணப்படும். சகோதரர் அல்லது சகோதரி இவர்கள் மூலமாகவோ அல்லது கிட்டிய உறவினர் மூலமாகவோ கொஞ்சம் தகராறுகள் ஏற்படும். இல்லையானால் ஒரு ஸ்திரீயினால் தகராறு ஏற்படும். மலைப்பிரதேசங்களுக்கும், வனப்பிரதேசங்களுக்கும் போவதென்பதைக் கைவிடவேண்டும். வியாபாரிகள் கூட்டு முறையில் மாறுதல் காண்பார்கள். குடும்ப ஜவேஜுபற்றி ஏதாவது சச்சரவேற்படலாம். இரண்டாம் பகுதி வியாபாரிகளுக்கு ஏற்றது. இக்கட்டத்தில் எதிர்பாராத திரவிய லாபத்துக்கு இடமுண்டு. பழைய வியாபார ஏற்பாடு திடீரென கைகூடி முடிவடையும். முற்றிய கொடிய வயிற்றுவலி மீண்டும் திரும்பலாம்.

ஆக 17. 24, 26, 30, ஸெப்டம்பர் 2, 6, 12, தேதிகள் இவர்களுக்கு வசதியானவை.

கும்ப ராசி

(அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

7-வது இடத்தில் சனி பெற்றிருக்கும் புதிய ஸ்தானம் காரணமாக இந்த ராசிக்காரர்கள் விஷயத்தில் சற்று பிரத்யோகமாக பிரகாச நிலைமை ஏற்படும். இது குடும்பம், உத்தியோகம் இரண்டிலும் பிரதிபலிக்கக்கூடியது. ஆனால் ஆரம்பத்தில் இது திருப்திகரமாயிராது. முன்னேற்றப் பாதையிலுள்ள தடைகள் விலகுவதற்கு இந்த நிலைமை அனுசரணையானதுதான். தடைகள் ஒன்றன்பின் ஒன்ருக அடுத்தடுத்து வரும். சனியால் பொறுமை சோதிக்கப்பட்டுவிடும். முதலில் எதிர்ப்புகளும் தடைகளும் இருக்கும்· பின்னர் வெற்றியோடு கண்யமான, வசதியான வாழ்வு ஆரம்பமாகும். 7-வது இடத்தில் சனி இருப்பது ஏற்கனவே உள்ள இல்லறவாழ்வையும் பாதிக்கும். இதற்குக் காரணம் தேக ஆரோக்கியமின்மையே. மனைவி அல்லது புருஷனைக் கண்டு வெகுநாளாயிருப்பவர்களானல் இந்த சந்தர்ப்பத்தில் சந்திக்க முடியும். லேவாதேவிக்காரர்களானல் நிலுவையை வசூலிக்க தாவா செய்ய நேரிடும். கோர்ட்டு விவகாரங்களை விலக்க வேண்டும். தந்தையோடுள்ள உறவு சிறிது காலம் சௌஜன்யமாயிராது. அல்லது மேலதிகாரிகளோடு போராட நேரிடும். பஸ், டிராம், ஸைகில் இவற்றில் போகும்போது ரொம்ப ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். அதிக உஷ்ணம், வாயு இவை காரணமாக தேகாரோக்கியம் திருப்திகரமாயிராது. ஒரு தூர தேசப்பயணம்ஏற்படஇடமுண்டு. வியாபாரிகள் தங்கள் கூட்டு முறையைத் திருத்தியமைத்துக் கொள்வது நல்லது. இரண்டாம் பகுதியில் வியாபாரத்தில் அபிவிருத்தி உண்டு.

ஆகஸ்ட் 17, 14, 26, செப்டம்பர், 6, 10, 13 தேதிகள் இவர்களுக்கு பயன் தரத்தக்கவை.

மீன ராசி

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

மீனராசிக்காரர்களுக்கு பஞ்சம சனி பெயர்ந்துவிட்டதால் இனி பொதுவாக சகல விஷயங்களிலும் மன நிம்மதி அதிகமிருக்கும். 6-வது இடத்துச்சனி விரோதிகளை விலக்கும்; கீழ்த்தரச் சிப்பந்திகளிடம் கண்டிப்பான ஒழுங்குமுறையும் நிலவும். ஊழியர்களிடமிருந்து ஏற்படும் கஷ்டங்கள் இனி இராது. மாத ஆரம்பத்தில் தேகசுகம் பாதகமடைந்தாலும் முடிவில் சரியாகிவிடும். பண முடை ஏற்பட்டு கடன் வாங்க நேரிடும். மிக்கபணக்காரர்களாகவிருப்பவர்களாயினும் இம்மாதத்தில் ஒரு நாளாவது பணமுடையை உணருவார்கள். மனைவி அல்லது புருஷனின் தேகாரோக்கியம் பாதிக்கப்படும். கிட்டிய பந்துவுடன் தகராறு ஏற்படலாம். மாமா அல்லது மருமானல் எதிர்பாராத கவலைக்கு உள்ளாகலாம். செலவு கட்டுக்கடங்காமல் உச்சத்தை அடையும். இனி முதற்கொண்டு சிக்கனமென்பது பேச்சளவோடுதான்; அனுஷ்டிக்க முடியாது. முதல் பகுதியில் குடும்பமாறுதலேதாவது ஏற்படலாம். வீட்டிலோ, வெளிப்பிரயாணத்தின்போதோ திருட்டுக்கான பயமுண்டு. பண விஷயத்தில் அபிவிருத்திகள் பிறக்கும். சிலருக்கு சுபகாரியங்கள் ஏதாவது நிகழும். இம்மாதம் இரண்டாம் வாரம் குடும்பத்தில் சந்தோஷம் நிலவும்.

ரோட்டில் விபத்துக்காளாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்· புதிதாக வயிற்றில் வலி இப்போதாவது அல்லது துலா மாதத்திலாவது ஏற்படலாம்.

ஆகஸ்ட் 17, 26, 30, செப்டம்பர் 3, 6, 9, 12 தேதிகள் இவர்களுக்கு உத்தமமானவை.

★

ஸ்ரீ பி. வி. ராவ்,
5, வாசுதேவபுரம்,
ஐஸ் ஹவுஸ் ரோடு,
திருவல்லிக்கேணி.

—★—



குற்றவாளி

கே. வி. கே.

சப்த மேகங்களும் திரண்டு விண்ணைத் திரையிட்டுக்கொண்டு கல்மாரி பொழிந்துகொண்டிருந்ததைக்கூட லட்சியம் செய்யாமல் விசையுடன் நடந்து சென்றான் வேலன். அந்தகாரம் எங்கும் சூழ்ந்து, அவன் கண்களைத் தாக்கி அழுத்தியது. இடையிடையே வெட்டிய மின்னலும், அதைத் தொடர்ந்து ஒலித்த இடியும் இரும்பு உள்ளம் படைத்த அவன் நெஞ்சைக்கூட சற்றுக் கலக்கத்தான் செய்தன.

குறுகிய சந்து ஒன்றில் திரும்பிய அவன், வெகுநேரம் நடந்த களைப்பாலும், முற்றும் நனைந்த ஆடையினால் ஏற்பட்ட குளிராலும் வாடி, ஒரு சிறிய வீட்டின் திண்ணையோரம் சற்று ஒதுங்கி நின்றான். அதே சமயம் தெருவின் எதிர்ப்புறத்திலிருந்த விளக்குக் கம்பத்தினடியில் நின்றுகொண்டிருந்த போலீஸ்காரன், வேலனைக் கண்டு அவனைக் கூர்ந்து நோக்கியபடியே அருகே நெருங்கி வந்தான். திண்ணையில் உட்காரப் போனவன், போலீஸ்காரனைப் பார்த்தும், சட்டென்று திரும்பி, மறுபடியும் தெருவில் நடக்க ஆரம்பித்தான். அதற்குள் அவனை அடையாளம் கண்டுகொண்ட போலீஸ் ஜவான், "டேய்! வேலா! எங்கேடா இப்படிச் சுத்தறே! 'கூண்டை' விட்டு வெளியே வந்து மூணு நாளு கூட ஆகலையே!" என்று மேலே கூறுமுன், வேலன் திரும்பிப் பார்த்து,

"ஒன்னுமில்லே அண்ணே! வீட்டுக்குத்தான் போறேன்!" என்று கூறியபடியே நழுவிவிட்டான்.

மறுபடியும் மழையில் நடந்து சென்ற வேலனின் தேகம் அசதியில் தள்ளாடியது. இரண்டு நாட்களாய் சரியான ஆகாரமில்லாததனால் அவன் கைகால்கள் துவண்டிருந்தன. சஞ்சலத்தினால் அவன் மனம் அலைமோதிக் கொந்தளித்து. சீ! என்ன ஜன்மமிது! வாழ்நாள் முழுவதும் கவலையும் பயமும் தானா! சுதந்திரமாக இருப்பதற்குக்கூடவா தடை! வறுமைதான் மனிதனைக் கொல்லுகிறது! அத்துடன் இந்தப் போலீஸ்காரர்களும் அல்லவா சேர்ந்து கொல்லுகிறார்கள்! கையில் ஓரணாக்கூட இல்லாமல் எப்படி வீடு செல்லுவது! இதோ என்றாலும் இன்னும் பதினொரு மைல்கள் நடந்தாக வேண்டும்! பாவம், வள்ளி என்ன செய்துகொண்டிருக்கிறாளோ! என்னை மணந்துதான் அவளுக்கு என்ன சுகம்! வருஷத்தில் எட்டு மாதம் நான் சிறையில் இருக்கிறேன்! அவள் என் பிரிவினால் சிறைப்பட்டுக் கிடக்கிறாள்! ஆக மொத்தத்தில் இருவருக்கும்தான் சிறைத்தண்டனை! பூரண கர்ப்பிணியாக அவளை விட்டுச் சிறைக்குச் செல்லவேண்டி இருந்ததே. அதுவும் என் துர்ப்பாக்கியம் தானே! இந்த ஒரு வருட காலமும் அவள் என்ன செய்தாளோ! எப்படி இருக்கிறாளோ! ஒருவேளை உதவி செய்வோர்கள் யாருமில்லாமல் இறந்து விட்டிருந்தாளானால்...............!

இவ்வித எண்ணங்கள் அவன் மனதில் தோன்றி அவனை உற்சாகம் இழந்தவனாய்ச் செய்தன. அவனறியாமல் அவன் உடல் நடுங்கிற்று. தோள்மேல் போட்டிருந்த துணியை எடுத்துப் பிழிந்துவிட்டுத் தலையில் சுற்றிக்கொண்டு, இன்னும் வேகமாக நடக்க ஆரம்பித்தான். அவன் எண்ணமெல்லாம், அன்றிரவுக்குள் வீட்டை அடைந்து, வள்ளியைச் சந்தித்து விடவேண்டும் என்ற ஒன்றேதான். தெய்வச்செயலாய் அவள் சௌகரியமாய் இருந்துவிட்டாளானால், இன்று முதலே இத்தொழிலை விட்டுவிட்டு வள்ளியுடன் இன்பமாய் வேறு ஊருக்குச் சென்று காலத்தைப் போக்கிவிடலாம்! அப்பப்பா! இந்தத் திருட்டுத் தொழிலே வேண்டாம்!

எங்கேயோ மணி பதினொன்று அடித்தது. யோசனையில் ஆழ்ந்து சென்றுகொண்டேயிருந்த வேலன் சட்டென்று நின்று கவனித்தான். ஆம், குழந்தையின் அழுகுரல்தான் கேட்டது. 'சோ' வென்று பெய்துகொண்டிருந்த மழையிலும், வானத்தின் குமுறலிலும் கூட அவன் செவிக்கு அக்குழந்தையின் ஓலம் தெற்றெனக் கேட்டது.

சுற்றுமுற்றும் பார்த்த அவன், அழுகுரல் வந்த திசையை நோக்கி நடந்தான். ஒரு பாழடைந்த வீட்டின் ஓரத்தில் குளிராலும்

பசியாலும்வாடிச்சோர்வுற்றிருந்த இளம் குழவி ஒன்று ஹீனஸ்வரத்தில் அழுதவாறே படுத்திருந்தது. அதையே சற்று நேரம் உற்று நோக்கிய வேலனின் மனம் பச்சாதாபத்தால் கரைந்தது. மெல்ல அக்குழந்தையை வாரி எடுத்து அணைத்துக்கொண்டான். அதே கணம் குழந்தையும் அழுகையை நிறுத்திவிட்டு, அவன் கரத்திலேயே உறங்க ஆரம்பித்து விட்டது.

அக்குழந்தையின் சுருண்ட கேசத்தைக் கோதியவாறே மெல்ல நடக்க ஆரம்பித்தான். இளம்பிறைச் சந்திரனைப்போன்ற அதன் முகம் அவன் மனதைக் கவர்ந்தது. பாவம்! யார் பெற்ற குழந்தையோ! இன்னும் சற்று நேரம் அது அங்கேயே இருந்தால் நிச்சயம் மீளா வழிக்குச் சென்றிருக்கும்! கர்ப்பிணியாய் விட்டு வந்த வள்ளிக்கும் இதேமாதிரி குழந்தை பிறந்திருக்குமல்லவா? இதைப்போலவே அதுவும் பெண் குழந்தையாயிருந்தால் எவ்வளவு அழகாயிருக்கும்!......தன் குழந்தை...! தன் அருமைச் செல்வி...!

மறு முறை குழந்தையின் முகத்தைக் குனிந்து நோக்கினுன். கனவுலகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்த அச்சிசு புன்னகை பூத்தது! ஆவலுடன் அதை முத்தமிட்டு விட்டு, மார்புடன் சேர்த்து அணைத்தவாறே இன்னும் வேகமாக நடக்க ஆரம்பித்தான். இன்னும் எட்டே மைல்கள்தாம் உள்ளன, அவனுக்கும் வள்ளிக்குமிடையே! அதையும் கடந்து விட்டால், பிறகு......!

"யாரங்கே, நில்!" என்ற இடியோசை போன்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு நின்றுன் வேலன். மறு கணம் அவன் முகத்தில் பளிச்சென்று விளக்கின் வெளிச்சம் விழுந்தது! திரும்பிப் பார்த்தான். இரண்டு ரோந்து போலீஸ்காரர்கள் கையில் தடியுடன் காட்சியளித்தனர். அவர்களில் ஒருவன் கையில் பிடித்திருந்த 'டார்ச்' விளக்கொளியே வேலனின் கண்களைக் கூசச் செய்தது.

"ஓ! வேலுவா! வாப்பா, வா! எங்கே காணுமேன்னு நினைச்சேன்! ஏது இவ்வளவு தூரம் வந்தூட்டே...!" என்றுன் ஒருவன் பரிகாசமாக.

ஒருவாறு சமாளித்துக்கொண்ட வேலன், தடுமாற்றத்துடனேயே பதிலளித்தான்.

"ஒண்ணுமில்லீங்க! வீட்டுக்குத்தான் போறேன்! வந்து ஒரு வருஷ காலமாச்சு......!"

அதற்குள் மற்றொரு போலீஸ் ஜவான் இடை மறித்து, "அடடா! நீ மூணு நாளைக்கு முன்னே தானே வெளியே வந்தே! மறந்தே போய்விட்டதே! அது சரி! என்ன இதுக்குள்ளே தொழிலே ஆரம்பிச்சுட்டயா...!" என்று கேட்டுக்கொண்டே அருகே வந்தான்.

"அதெல்லாம் ஒண்ணிமில்லீங்க...!" என்று கூறியபடியே வேலன் குழந்தையை இறுக அணைத்துக்கொண்டான். அருகே வந்த போலீஸ்காரன் அவன் கையைப் பார்த்துவிட்டு,

"டேய்! எங்கிட்டயா போய் பேசறே! மரியாதையா கையிலே என்ன வச்சிருக்கேன்னு காமி! இல்லாட்டி உன் உசிரை...!" என்று கடுமையாக அதட்டியபடியே அவன் கழுத்தில் கையைப் போட்டுப் பிடித்துக்கொண்டான்.

அதற்குப்பின் நடந்தவையெல்லாம் வேலனுக்குக் கனவுபோல் தான் தோன்றின. அவன் கையிலிருந்த குழந்தை பலவந்தமாகப் பிடுங்கிக் கொள்ளப்பட்டது! அவனுடைய போதாத காலம், அக்குழந்தை பசியாலும் குளிராலும் வாடி இருந்ததனுல் வெகு நேரத்திற்கு முன்பே அவன் கையில் இறந்து விட்டிருந்தது! பிறகு கேட்பானேன்! 'நகைகளைப் பறிப்பதற்காக குழந்தையைக் கொன்றுவிட்டான்' என்ற குற்றத்துடன் அவன் மறுபடியும் சிறையினுள் தள்ளப்பட்டான்!

எல்லை மீறிய துக்கத்தினுல் வெறித்த பார்வையுடன் சிறைக் கூடத்தை அடைந்த வேலன் ஒரே ஒரு விண்ணப்பம் மட்டும் செய்து கொண்டான். அதிகாரிகளிடம் தனிமையில் தவிக்கும் வள்ளிக்குத்தான் ஒரு கடிதம் மட்டும் அனுப்ப வேண்டினுன். அனேக தடங்கல்களுக்குப்பின், கடைசியில் அதிகாரிகள் அவன் கடிதத்தை அனுப்பினர். ஆனுல், இரண்டே நாட்களில் அக்கடிதம் திரும்பி வந்துவிட்டது அவனுக்கு! அத்துடன் வேறு செய்தியும் வந்திருந்தது! மூன்று மாதத்திற்கு முன்பே வள்ளி இறந்து விட்டாள் காசநோயில்! அவளுடைய குழந்தையின் இருப்பிடம் தெரியவில்லை!

உடலும் உள்ளமும் உடைந்த வேலன் சிறையினுள் குழந்தையைப்போல் விசித்து அழுதுவிட்டான். வள்ளிக்குப் பிறந்த தன் குழந்தை எங்கே என்று அவன் மனம் அங்கலாய்த்தது! அன்று தன் கையில் அகப்பட்டு, இறந்து, தன்னைக் குற்றவாளியாக்கிய அச்சிசு தன் சொந்தக் குழந்தை என்பது அவனுக்கு எப்படித் தெரியும்!



மன்னனை ஆண்ட மங்கை

ஸ்ரீமதி லட்சுமி அம்மா

இதுவரையில்...

[எட்டாம் நூற்றாண்டிலே ராஜஸிம்ம பாண்டியன் ஒரு சக்கரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்ட மகிஷியாக்கிக் கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனாபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனோ கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை. ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிறான். இந்நிலையில் இராஜ புரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபை கூட்டி, மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிறார். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணுசித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிறார்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொறாமையுண்டாக்குகிறது.]

18
வெற்றி முரசு

விஷ்ணு சித்தர் வருவதற்கு முன் சபை குழப்பமாகவே இருந்தது. அந்த விவகாரங்களில் கலந்துகொள்ளாமலே ஒதுங்கியிருந்தார் ஆனந்த தீர்த்தர். சேரமன்னன் ஒரு பௌத்த பிட்சுவைப்போல் வேடம் பூண்டு ஞானதீர்த்தர் என்ற பெயருடன் ஆனந்ததீர்த்தருக்குச் சீடராக வந்திருந்தான்.

குருவும், சீடனும் தங்களுக்குள்ளே பேசிக் கொண்டிருந்தார்கள்.

சீடன்: 'விஷ்ணுசித்தரை நான் பார்த்ததில்லை. அவருடைய அதிசயமான தேஜஸைக் குறித்தும் முகப்பொலிவைக் குறித்தும் யாத்திரிகர்கள் கதை கதையாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன். குமரியில் நீராடவரும் குமரரும் கிழவரும், "அவரைக் கண்டதும் நாங்கள் எங்களை அறியாமலே காலில் விழுந்து வணங்கினோம்" என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படி என்ன அபூர்வசக்தி அவரிடம் காணப்படுகிறது?'

குரு: 'சக்தியுமில்லை; சித்தியுமில்லை. நந்தவனக் கலைஞர் அவர். அந்த உழைப்பினால் உடல்வளம் இருக்கிறது. அந்த அதிசயமான ஆரோக்கியத் தோற்றத்தைத்தான் தேஜஸ்' என்று மயங்குகிறார்கள் ஜனங்கள். ஜனங்களின் இந்த மயக்க நிலையில் அவர் மனோவசியம் செய்து ஆள் சேர்க்கிறார் தம் பக்தி மதத்திற்கு!

சீடன்: 'நமது பிட்சுக்களும் அந்த வழியைப் பின்பற்றினால் ஆரோக்கியமும் மனோவசிய சக்தியும் பெறக்கூடுமல்லவா?'

குரு: 'ஞானதீர்த்தா! அது ஞானமார்க்கமல்லையே. மேலும் அந்தத் தோட்டக்கலை எத்தனையோ சிற்றுயிர்களுக்குக் கொலையாகிறதல்லவா? எத்தனை புழு பூச்சிகள் அநியாயமாய் வதஞ் செய்யப்படுகின்றன! நம்முடைய அஹிம்ஸா தர்மத்துடன் முரண்பட்ட தொழில் அல்லவா நந்தவன கைங்கரியம்?'

சீடன்: 'சுவாமி! நீண்ட காலமாக எனக்கு இருந்த ஒரு சந்தேகத்தை இப்போது தெளிவித்

தீர்கள். இன்னும் சிற்சில சந்தேகங்களையும் தெளிவித்துக்கொள்ளலாமென்று நினைக்கிறேன். தாங்கள் இந்தத் தர்க்கங்களில் கலந்துகொள்ள விரும்பினால், நாம் பின்னால் பேசிக்கொள்ளலாம்.'

குரு: 'இந்தத் தர்க்கச் சந்தையில் நமக்கு வேண்டிய பொருள் கிடைக்கப்போவதில்லை. இதில் கலந்துகொள்ள எனக்குத் துளியும் இஷ்டமில்லை. இவர்கள் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு ஓய்ந்துபோகட்டும். ஆனால் இவர்கள் தாங்கள் ஒழிவதற்குள், விஷ்ணுசித்தர் வந்ததும் அவரையும் ஓரளவு ஓயச்செய்து களைப்பாக்கி விடுவார்கள். அந்த நிலையில் நான் அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்து சபையை வசீகரித்துவிடலாமென்று நினைக்கிறேன். இதுதான் என் திட்டம். இனி நாம் இங்கேயிருந்து இந்த விஷயங்களைப் பேசுவதும் தகாது.

சீடன்: 'ஏன் அப்படி? இந்தச் சந்தை இரைச்சலில் யார் நம்மைக் கவனிக்கிறார்?'

குரு: 'அந்தப் பொல்லாத மந்திரி மாறங்காரி இருக்கிறாரே, அவர் பக்கப் பார்வையாக நம்மை இடையிடையே கவனித்து வருவது போல எனக்குத் தோன்றுகிறது.'

சீடன்: 'அப்படியானால் நாம் இங்கே இருக்கக்கூடாதுதான். சிறிது வெளியே போய்ப்பேசிக்கொண்டிருக்கலாமா? ஸ்வாமி எப்படி உத்தரவு செய்கிறது?'

குரு: 'அப்படியே செய்வோம்.'

சீடன்: 'அந்த மிகப் பொல்லாத நரசிங்கம் வந்துவிட்டால்?'

ஆனந்ததீர்த்தர் பயந்து போய் "ஐயோ!" என்றதும், அவர் அப்படியே அலறிவிடாமல் சீடன் வாயைப் பொத்தினான். பிறகு குரு, 'என்ன? என்னையும் அறியாமல் இந்தப் பயம்? நரஸிம்மன் ஒற்றர் படையுடன் விஷ்ணுசித்தருக்குக் காவலாகப் போயிருக்கிறான் என்று நமது ஒற்றர்கள் நம்மிடம் சொல்லவில்லையா? ஏன் அரசே!— இல்லை. ஞானதீர்த்தா! உனக்கும் இந்த மறதி என்று கேட்டுக்கொண்டே எழுந்திருந்தார். சேரலாதான் பதில் சொல்லாமலே அவரைத் தொடர்ந்தான்.

தார்க்கிகர்களின் உஷ்ணமான விவகாரங்களைப்போல் சூரியனுடைய உக்கிரமான கிரணங்களும் பிரகாசித்துக்கொண்டிருந்தன. ஆனால் அந்தச்சோலையில் அந்த உஷ்ணம் சிறிதும் தென்படவில்லை. ஆனந்ததீர்த்தரும் சேரலாதனும் சிறிது தூரத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

சீடன்: 'ஏன் இப்படி நம்மைப் பயம் துன்புறுத்துகிறது? விஷ்ணுசித்தர் அச்சத்தையே அறியாதவர் என்கிறார்களே?'

குரு: 'அவருக்கு நம்பிக்கை அதிகமாய் இருக்கிறது. நம்பத்தகாததைத அப்படி விடாப்பிடியாக நம்பியிருக்கிறார். நம்முடைய பிட்சுக்களோ 'புத்தம் சரணம் கச்சாமி' என்று வாயால் சொல்லுகிறார்கள்; உள்ளத்தில் ஐயந்திரிபின்றி அவ்வளவு நம்பிக்கை வைத்திருப்பதாகக் காணோம்.'

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்

போதே 'ஐயோ!' என்று அலறிக்கொண்டே திரும்பிப்பார்த்தார் ஆனந்த தீர்த்தர். முதுகில் யாரோ அசப்பில் தட்டியதுதான் அதற்குக் காரணம், அந்த ஆசாமி அப்படித் தட்டிவிட்டு ஓட ஆரம்பித்தான்.

'ஓஹோ பைத்தியக்காரன் என்றான் சீடன். ஓடத் தொடங்கியவனே, யார் பைத்தியக்காரன்? நீ பைத்தியக்காரன்! உன் அப்பன் பைத்தியக்காரன்! உன் குரு பைத்தியக்காரன்! அந்த மண்டபத்தில் "கடபட"வென்று கத்திக் கொண்டிருக்கிறார்களே அவர்கள் பைத்தியக்காரர்கள்!' என்று சொல்லிக்கொண்டே போனான்.

'ஐயோ! ஞானப்பிரானல்லவா?, என்று பிட்சு சொல்லிக்கொண்டே அந்த ஆசாமியைப்பற்றிக் கொள்ள முயன்றார். ஆம், ஆசாமி ஞானப் பிரான்தான்! எங்கெங்கேயோ அலைந்து திரிந்து விட்டு இங்கும் வந்துவிட்டார்.

காவற்காரர்களையும் லட்சியம் செய்யாமல் பூங்காவனத்திற்குள் ஓடி வந்துவிட்டார். ஆனந்ததீர்த்தர் பின் தொடர்ந்ததும் ஞானப் பிரானின் ஓட்டம் அதிகரித்தது. சேரலாதன் துரத்திப் பிடிப்பதற்குள், சில காவற்காரர்கள் ஓடி வந்து, 'அந்தப் பைத்தியக்காரனை இங்கே விட்டுவிடுங்கள்' என்று பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

இதற்குள்ளே 'விஷ்ணுசித்தர் வருகிறார், வில்லிபுத்தூரர் வருகிறார்' என்ற கோஷம் கிளம்பியதும், ஆனந்ததீர்த்தரும் சேரலாதனும் அப்படியே எழுந்து சபாமண்டபத்தை நோக்கி வந்தார்கள்.

விஷ்ணுசித்தரைக் கண்டதும் சந்தை இரைச்சல் ஓய்ந்துவிட்டது. சபை முழுதும் தன்னை அறியாமலே அஞ்சலி செய்து வழிவிடத் தொடங்கியது.

சீடன்: 'என்ன அதிசயம் இது!'

குரு: 'என்ன அநியாயம் இது?'

சீடன்: 'இதில் என்ன அநியாயம் இருக்க முடியும்?'

குரு: 'இதில் என்ன அதிசயம் இருக்க முடியும்?'

சீடன்: 'பக்தி மதத்தின் பரமவிரோதிகளான நாஸ்திகர் உள்ளிட்ட அனைவரும் இப்படி இவரை அஞ்சலி செய்வதென்றால், இது அதிசயம்தானே! இவருடைய தேஜஸ் நான் கேள்விப்பட்டபடி அதிசயமாகத்தான் இருக்கிறது. அந்த அதிசயம்தான் சபையை இப்படிக் கட்டுப்படுத்திவிட்டதென்று தோன்றுகிறது எனக்கு.'

குரு: 'அப்படியில்லை. அதிசயமான "தேஜஸ், தேஜஸ்" என்று வதந்திகளைப் பாகவதர்கள் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். அந்த வதந்திகளால் ஏற்கெனவே இந்த மூட வித்துவான்களெல்லாம் ஓரளவு வசிகரிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசன் தங்கப் பல்லக்கு முதலான விசேஷ வைபவங்களுடன் இவரை அழைத்து வருகிறான். இந்த அம்சங்களெல்லாம் சேர்ந்துதான் இவருக்கு இவ்வளவு சூட்சும சக்தி அளித்திருக்கின்றன. இந்தச் சக்தியெல்லாம் பறந்துவிடும் என்னுடன் விவகரிக்கும்போது.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே செல்வநம்பி தமது ஆசனத்திலிருந்து எழுந்து வந்து விஷ்ணுசித்தரின் அடிகளில் வணங்கினார். அவரும் இவர் அடிகளில் வணங்கினார். இரு பெருந்தோழர்களும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டார்கள். அப்போது ஆனந்ததீர்த்தர் சேரலாதனை நோக்கி, 'சீடா! பார்த்தாயா இந்தக் காட்சியை? ராஜபுரோகிதர் பகிரங்கமாக இப்படிச் செய்யலாமா' என்றார்.

சீடன்: 'இந்த இருவரும் சேர்ந்து ஏதோ சதி செய்திருப்பதாகவே என் புத்தியில் படுகிறது.'

குரு: 'சதியையும் வென்று விதியையும்வென்று விடலாம், நாம்மட்டும் மனஉறுதியுடன் இருந்தால்!'

சீடன்: 'ஐயையோ, என்ன அநியாயம்! அரசனும் சிங்காசனத்திலிருந்து எழுந்து அடிகளில் முடிபட விழுந்து வணக்கம் செலுத்துகிறானே!'

சாந்தி பரிமளிக்கும் அந்த முகமண்டலத்தைக் கண்டதும் அரசன் தன்னை அறியாமலேவிஷ்ணுசித்தர் காலில் விழுந்து நமஸ்கரித்தான். அவன் எழுந்து நின்றதும், விஷ்ணுசித்தரின் அன்பும் இரக்கமும் ததும்பிய கண்கள் பாண்டியனை இதயம் குளிர நோக்கின.

செல்வநம்பிக்கு அருகே விஷ்ணுசித்தருக்கு ஒரு சிறந்த ஆசனம் அமைக்கப்பெற்றிருந்தது. செல்வநம்பி விஷ்ணுசித்தரை அந்த இடத்திற்கு அழைத்துப்போனார். அப்போது அரசனது சிங்காசனத்திற்கு அருகில் வந்ததும், அங்கே நின்றுகொண்டிருந்த ராணி பூசுந்தரிதேவி விஷ்ணுசித்தரின் அடிகளில் வணங்கினாள். அவளையும் விஷ்ணுசித்தரின் கள்ளங்கபடற்ற கண்கள் குளிரக் கடாட்சித்தன. உடனே அரசன் விஷ்ணுசித்தரைத் தன் சிங்காசனத்திலேயே அமரச்செய்து அருகே பக்தியுடனும் விநயத்துடனும் நின்றான். பூசுந்தரிதேவியும் அரசனுக்கு அருகே நின்றாள்.

இதைப் பார்த்ததும், பண்டிதர் கூட்டம் எங்கும் ஒரே பொறாமைக் காய்ச்சலாகி விட்டது. அதே பொறாமை அக்கினிக் காற்றாக ஆனந்த தீர்த்தரின் உள்ளத்திலும் வீசியது. சேரனே, 'இந்தப் பாண்டிய ராஜ சக்கிரவர்த்தியின் திறமையெல்லாம் இவ்வளவுதானா?' என்று குருவை நோக்கிக் கேட்டான்.

குரு: (உள்ளத்திலுள்ள பொறாமையை அடக்கிக்கொண்டு 'இதுதான் சமயம். இதை நாம் பயன்படுத்திக்கொண்டு வெற்றி பெறவேண்டும்.'

சீடன்: 'அது எப்படி?'

குரு: 'பளிச்சென்று மண்டபத்திற்குள்ளே போய் வித்துவான்களைத் தூண்டிவிட வேண்டும்.

சீடன்: 'யார் அப்படிச்செய்வது?'

குரு: 'நானே போய் அந்தக் காரியத்தைப் பார்க்கிறேன். நீ இங்கேதானே நின்று பார்த்துக் கொண்டிரு.

இப்படிச் சொல்லிவிட்டு, ஆனந்ததீர்த்தர் சில வித்துவானிடம் போய், 'அதோ அந்த விஷ்ணுசித்தர் உங்களைப்போல் மகாவித்வானா?' என்று முணுமுணுத்தார். அவர்களும், "ஆமாம் சுவாமி! நாங்கள் அளவிறந்த சாஸ்திரக் கடல்களைக் குடித்து ஏப்பம் விட்டிருக்கிறோம். இச்சபையில் எங்களுக்கு மதிப்பில்லை' என்று பதில் முணுமுணுத்தார்கள்.

வேறொரு கூட்டத்திற்குள் போனார் ஆனந்த தீர்த்தர். அவர்கள் வைதிகர்கள். 'ஐயோ, பௌத்தன் வருகிறான், விலகுங்கள். விலகுங்கள், தீட்சிதர்களே! சாஸ்திரிகளே!' என்று அவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள். அவர்களின் தலைவரை நோக்கி ஆனந்த தீர்த்தர், 'நான் பௌத்தன் தான், வேத விரோதிதான்! ஆனால் அந்த விஷ்ணுசித்தர் வேதங்களை மறந்துவிட்டாரே, தம் தோட்ட வேலைகளில்!' என்றார். அவர்கள் எல்லாரும், 'ஆம், ஆம்' என்று குதூகலமாய்க் கூவினார்கள்.

அப்போது அருகேயிருந்த ஆகமவாதி ஒருவர், 'வேதம்வந்தாலும் ஆகமம்வருமா அவருக்கு?' என்று கேட்டார்.

'இப்போது வராது என்று தெரிந்திருக்கும் போது, "வந்தாலும்" என்று பேசுவது தர்க்க ரீதியாகத் தவறல்லவா?' என்றார் அங்கே வந்த தர்க்க சாஸ்திரி. 'ஆம், ஆம்; தர்க்கம்தான் ஞானத்திற்கு உயிர்' என்று அவரையும் தூண்டிவிட்டார் ஆனந்ததீர்த்தர்.

பிறகு மீமாம்ஸர்களும் பௌத்தர்களும் இருந்த இடத்திற்கு வந்தார் ஆனந்ததீர்த்தர். அவர்கள் ஒருவரை ஒருவர் கண்டித்துக்கொண்டிருந்தார்கள். அந்த இரு வகுப்பினரோடும், மாயாவாதியர் வந்து தாக்கினர். அந்தச் சண்டைகளை விலக்கி ஆனந்ததீர்த்தர், 'உங்களுக்கெல்லாம் பொதுவான சத்துரு சிங்காசனம் ஏறிவிட்டார்!' என்று விஷ்ணுசித்தரைச் சுட்டிக் காட்டினார்.

பிறகு ஹடயோகிகளும் ராஜயோகிகளும் விவகரித்துக்கொண்டிருந்த இடத்திற்கு வந்து' 'விஷ்ணுசித்தர் யோகியல்ல, பக்தர்தாமே!' என்று சொல்லி, அவர்கள் ஒற்றுமையுடன் அவர் கொள்கையைத் தாக்கவேண்டும் எனத் தூண்டினர்.

தன்னுடைய குருவின் அந்தச் சாமர்த்தியங்களையும், அவர் யௌவன சிகிச்சை செய்து கொண்டவர்போல் வித்வான்களின் கூட்டங்களுக்கிடையே துள்ளிப் போவதையும் சேரன் அதிசயமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அதற்குள் ஆனந்ததீர்த்தர் நாஸ்திகக் குழுவினர் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். அவர்கள், 'பக்தியெல்லாம் மூடபக்திதான்!' என்று பேசிக்கொண்டிருந்தார்கள். 'அந்தக் கொள்கையில் அவ்வளவு தவறில்லை. எங்கள் புத்தபக்தியோடு சேர்ந்ததல்ல' என்றார் ஆனந்த தீர்த்தர். அப்பால் அவர் லோகாயதர்களையும் தூண்டிவிட்டார்.

அதற்குள் விஷ்ணுசித்தருக்கு எதிரே வந்து, வந்து பல்வேறு மதவாதியர்களும் வித்துவான்களும் கேள்வி அம்புகளைப் பிரயோகித்தவண்ணமாயிருந்தனர். ஆனால் இவர் பொறுமை அவர்களுடைய பொருமையை வென்றுவிட்டது. அன்பு பகையை வென்றுவிட்டது. இரக்கம் இதயங்களையெல்லாம் உருக்கிவிட்டது.

தர்க்க சாஸ்திரிகளெல்லாம் பிரமிக்கும்படி 'காரணமில்லாத காரியமே கிடையாது' என்று நிலை நிறுத்தினர். ஆதியான உலக காரணவஸ்துவே கடவுள் என்று சித்தாந்தம் செய்தார். எங்கும் நிறைந்த பரம்பொருளே விஷ்ணு என்றார். அம் மெய்ப்பொருளை அவதாரமூர்த்திகளாகவும் விசேஷமாய்க் கண்ணனாகவும் வழிபட்டுச் சரணாகதி செய்யவேண்டும் என்றார்.

விஷ்ணுசித்தரின் வாக்கு, சொற்களாகவா வெளிப்பட்டது? அமுதப் பிரவாகமாய்ப் புறப்பட்டது. அந்தச் சபாமண்டபத்தைக் கற்களும் கரைந்து உருகியது போன்றதென்றால், கேட்டவர் நெஞ்சங்கள் எப்படி வசீகரிக்கப்பட்டிருக்கவேண்டும்!

அவரை நேராகப் பாராதபோதுதான் வித்வான்களால் கேள்வியம்புகளை வீசமுடிந்தது. அந்தக் கண்களால் வசீகரிக்கப் பெற்றவர்களெல்லாம் அப்படியே சரணாகதி செய்துவிட்டார்கள்.

வித்துவான்களில் சிலர், 'அதோ என்ன அதிசயம்! அந்தப் பொற்கிழி தோரண வாசலிலிருந்து விஷ்ணுசித்தரை நோக்கித் தாழ்ந்து வளைந்துவிட்டதே!' என்று கூச்சலிட்டார்கள்.

ஆனந்ததீர்த்தர், 'நாமும் விவகாரம் செய்து பார்க்கவேண்டியதுதான்' என்று மனஉறுதியுடன் விஷ்ணுசித்தரை அணுகுவதற்குள், பாண்டியன் ஓடிப்போய்க் கிழியை அறுத்துக் கொண்டு வந்து விஷ்ணுசித்தரின் அடிகளில் வைத்துத் தொழுதான்.

இடிக்குரலில் முரசுகள் அந்த வெற்றியைப் பேசின.

அடியனேற்(கு) அருள்நல்கி
ஆளவந்த திருவுருவோ!

என்றும்,

அடியனேன் அல்லல்தீர
ஆளவந் தவரே!

என்றும் அரசன் விஷ்ணுசித்தரைப் போற்றி வணங்கினன்.

(தொடரும்)

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாக கட்டவேண்டும்.)

	இந்தியா, சிலோன்		வெளிநாடு	
1 வருஷம்	13	0	18	0
6-மாதம்	7	0	9	8
3-மாதம்	3	12	5	0

தனிப்பிரதி அணா 4

3-மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக் கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்,
'சுதேசமித்திரன்' ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.



மாதர் மகா சபை

குங்குமம்

'பாவம்! தங்கம் போய்விட்டாளாம் மாமி' என்று 'க்ஷேம ஸமாசாரம்' சொல்லிக் கொண்டு வந்தாள் பானு.

'போய்விட்டாளா மேடி பாவம்! இப்பொழுதுதான் கேள்விப்பட்டேன். சேஷிப் பாட்டி சொன்னாள். என்னடி உடம்பாம்?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஒரு உடம்புமில்லையாம் மாமி. வழக்கப்படி காலையில் எழுந்து சமையல் செய்து அகமுடையானுக்கும், குழந்தைகளுக்கும் போட்டு அவர்களை ஆபீசுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்பிவிட்டுத் தானும் சாப்பிட்டு விட்டு, பாத்திரங்களையெல்லாம் அலம்பி கவிழ்த்து விட்டு, கூடத்தில் ஊஞ்சலில் வந்து உட்கார்ந்தாளாம். வயிற்றில் ஏதோ சங்கடம் செய்கிறமாதிரி இருந்ததாம். அவ்வளவுதான். கைகால்களெல்லாம் 'துணியாய்' விழுந்து விட்டதாம். உடனே ஆபீஸுக்கு அகமுடையானுக்கு 'போன்' பண்ணி, அவர் டாக்டரை அழைத்துக்கொண்டு வந்தாராம். ஒன்றும் உபயோகமில்லையென்று டாக்டர் உதட்டைப் பிதுக்கிவிட்டாராம். என்ன உடம்பென்று சொல்லத் தெரியவில்லையாம். எதற்கும் இரண்டு இஞ்ஜெக்ஷன் செய்து வைக்கிறேன் என்று சொல்லி இரண்டு இஞ்ஜெக்ஷன் செய்துவிட்டுப் போனாராம். அவர் போன பத்து நிமிஷத்துக்கெல்லாம் பிராணன் போய்விட்டதாம்' என்றாள் பானு.

'என்னமோ விஞ்ஞானம், ஆராய்ச்சி அது இது என்று உலகத்தில் பிரமாதப்படுகிறதேயொழிய அதன் பலனெல்லாம் உலகத்தை அழிப்பதற்கான நாச சக்திகளாய் உபயோகப்படுகிறதேயொழிய உலகத்துக்கு உபகாரமாக ஒன்றையும் காணோம். ஐயாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்தும் பதினாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்தும் அரை செகண்டில் ஒரு நகரத்தையே தரைமட்டமாக்கிவிட முடியும் என்று வீராப்பு பேசுகிறார்களேயொழிய, போன உயிரைத் திரும்பிக் கொண்டுவர யாராலும் முடியவில்லை' என்றாள் ருக்குவின் மாமியார்.

'கலியின் கொடுமை மாமி கலியின் கொடுமை' என்றாள் சரோஜா.

ருக்கு சொல்லுகிறாள்

'இவ்வளவுதானா? இன்னும் ஏதாவது பெட்டியில் வைத்திருக்கிறாயா?' என்றேன் என்னை பீச்சுக்குக் கூப்பிட வந்த கீதாவைப் பார்த்து.

'மாங்காய் மாலையும் நாகொத்தும் பெட்டியில் வைத்திருக்கிறேன்' என்றாள் கீதா.

'அதையும் போட்டுக் கொண்டு வந்திருக்க வேண்டும்.'

'ஏன்! எதற்காகச் சொல்கிறாய்?'

'போடி பைத்தியமே! நாகரிகத்துக்கே வழி காட்டியாய் இருந்துவிட வேண்டுமென்ற ஆசை மாத்திரம் இருக்கிறது! அதை சரிவரச் செய்து கொள்ள வேண்டாமோ?'' பிளெயினாக' மொட மொடவென்று மெல்லிய லேஸ் பார்டருடன் கூடிய புடவையும், அதே கலரில் ஜாக்கெட்டும் போட்டுக் கொண்டால் எடுப்பாகத்தான் இருக்கிறது. காதில் தொங்கட்டம், கழுத்தில் மெல்லியதாக ஒரு வடம் செயின், கையில் 'லூசாக' இரண்டு வளையல்கள், அத்துடன் நின்றிருந்தால் எவ்வளவு எடுப்பாக இருந்திருக்கும் தெரியுமா? மீதி அதிகப்படியாகப் போட்டுக்கொண்டிருக்கும் நகைகள் மாலை வேளையில் உல்லாஸமாகப் போவதற்குள்ள அழகையே கெடுத்து விட்டது. கல்யாண வீட்டிற்கோ, உற்சவ காலங்களில் கோவில்களுக்கோ உயர்ந்த கெட்டிக் கரை புடவைகளை உடுத்திக்கொண்டு போகும்போது இருக்கப்பட்ட நகைகளையெல்லாம் அணிந்துகொண்டு சென்றால் எடுப்பாக இருக்கும். இந்த வேளைக்கு இவ்வளவு 'சுமை' வேண்டியதில்லை என்றேன்.

‘பாவம் பெரிய ஸம்ஸாரி’ என்றாள் ருக்குவின் மாமியார்.

‘ரொம்ப கஷ்டம் பாவம்! தங்கத்தின் அகமுடையான் புழுவாய்த் துடிக்கிறானாம்’ என்றாள் பானு.

‘துடிக்கமாட்டானோடி பாவம்! எத்தனை பசங்கள் அவனுக்கு?’

‘ஏழு பசங்கள், மூன்று பெண்கள், நாலு பிள்ளைகள். எல்லாம் சிறிசுகள்; பதினெட்டு வயதில் ஒரு பையன். அவன்தான் பெரியவன். மீதியெல்லாம் அவனுக்குச் சிறியதுகள். கடைசியாக ஒரு வயதில் ஒரு பெண் இருக்கிறது.’

‘பெரிய ஸம்ஸாரி பாவம்! இதையெல்லாம் வைத்துக் கொண்டு அவன் எப்படிக் காப்பாற்றப் போகிறான்? தங்கத்தின் அகமுடையானுக்கு என்ன வயசாகிறது?’

‘நாற்பத்தி எட்டோ, நாற்பத்தி ஒன்பதோ ஆகிறதாம்.’

‘அட பாவமே. இரண்டுங் கெட்டானாகப் போய்விட்டதே. பத்து வருஷம் முன்னாலாவது, பத்து வருஷம் பின்னாடியாவது இம் மாதிரி நேர்ந்திருந்தால் ஒருமாதிரியாகப் போயிருக்கும்.

ஆமாம், பத்து வருஷம் முன்னால் நேர்ந்திருந்தால் மறு விவாகமாவது செய்து கொண்டிருக்கலாம். பத்து வருஷம் பின்னாடி ஏற்பட்டிருந்தால் ஏதோ ஆயிற்று அறுபதுவயது. ஆகக்கூடி உயிருடன் இருக்கப் போகிறது இன்னும் கொஞ்ச நாளைக்கு. அதற்குள்ளாக பிள்ளைகளுக்குக் கல்யாணமாகி நாட்டுப் பெண்கள் வீட்டுக்கு வந்து குடும்பபாரத்தை ஏற்றுக்கொள்வார்கள். இப்பொழுது இரண்டுங் கெட்டானாகவல்லவோ போய்விட்டது! என்றாள் ருக்கு.

அவனுக்குத்தாயார் தகப்பனார் இருக்கிறார்களாமோ? என்றாள் ருக்குவின் மாமியார்.

தகப்பனார் இல்லையாம். கண் தெரியாமலும் காது கேட்காமலும் தள்ளாத கிழவி தாயார் இருக்கிறாளாம். அவருக்கு சிச்ருஷைக்கு ஒருவர் வேண்டுமாம் என்றாள் சரோஜா.

கூடப் பிறந்தவர்கள் யாரும் இல்லையாமோ?.

அவருக்கு இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்களாம். பதினைந்துவருஷமாக ஒருவருக்கொருவர் பேச்சுவார்த்தை கிடையாதாம். தங்கத்தின் தாய்வழியிலும் இந்தக் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களாக யாரும் இல்லையாம், ரொம்பநாளைக்கு முன்னாலேயே தங்கத்தின் தாயார்,தகப்பனார் இறந்துவிட்டார்களாம். கூடப்பிறந்த சகோதரன் ஒருவன் இருக்கிறானாம். அவன் சினிமாவில் சேர்ந்து கெட்டழிந்து யாரோ ஒரு பார்ஸியைக் கல்யாணம் செய்துகொண்டு இவர்களைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கிறதில்லையாம். தங்கத்துக்கு ஒரு சகோதரி இருக்கிறாளாம். அவள் பம்பாயில் இருக்கிறாளாம். அத்துடன் அவள் பெரிய சம்ஸாரி. இந்தப்பசங்களுக்கு ஆதரவாக வந்து இருக்கக்கூடிய நிலைமையில் இல்லை என்றாள் சரோஜா.

வந்தவர்:—என்ன ஓய், இது! சங்கீதத்தையெல்லாம் விட்டிட்டு தெமர்னு இந்த வேஷத்தில் இறங்கிவிட்டீர்?’’

சங்கீத வித்வான்:—இப்போல்லாம் பெரிய மனுஷா விடுகளிலே பெண் குழந்தைகளுக்குப் பாட்டுக்குப் பதிலா ‘டான்ஸ்’ சொல்லிக்கொடுக்கிற ‘பாஷன்’ வந்துட்டதினாலே எனக்குச் சுத்தமா ஒரு ‘ட்யூஷன்’கூட கிடைக்கலே! அதனாலே இனிமே டான்ஸ் ட்யூஷனாவது கிடைக்குமேன்னு நான் ‘ப்ராக்டீஸ்’ பண்ண ஆரம்பிச்சுட்டேன். பொழைச்சாகணும் பாருங்கோ..............’’

‘அப்படியானால் மனுஷ்யன் நடு சமுத்திரத்தில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கிறான் என்று சொல் என்றாள் ருக்குவின் மாமியார்.

‘கொஞ்சமாகவா தத்தளிக்கிறான்? திக்கு திசை தெரியாமல் தத்தளிக்கிறான். அவள் போனதைத்தான் போயிருக்கக்கூடாதா என்று கதறுகிறானாம் என்றாள் சரோஜா.

‘என்னமோ உலகத்திலே ஆண்கள், பெண்களை கிள்ளுக்கீரையாக மதித்துப் பேசுகிறார்கள். ஆண்களை விடப் பெண்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்பது இப்படிப்பட்ட சமயங்களில் அல்லவோ தெரிகிறது! அத்துடன்தான் போய் அவள் இருந்திருக்கக்கூடாதா என்று அவன் சொல்வதுதான் ஸாரமான வார்த்தை. இதுவே அவன் போய் அவள்

இருந்திருந்தால் இவ்வளவு கஷ்டம் இருக்காது போல்தான் தோன்றுகிறது. ஏதோ கொஞ்சம் பணம் காசு வைத்துவிட்டுப் போயிருந்தாளுனல் அதை வைத்துக்கொண்டு ஒரு பத்து வருஷ காலம் கஷ்டப்பட்டு பிள்ளைகளை விருத்திக்குக் கொண்டு வந்து விட்டாளானல் பிள்ளைகள் தலையெடுத்து இவளைக்காப்பாற்றி விடுகிறர்கள். மீதி பசங்களைக்காப்பாற்றுவது அவர்கள் பொறுப்பாகப் போய்விடுகிறது. தெரியாமலா சொல்கிறர்கள் 'தாயில்லாக் குழந்தைகள் பாவம்!' என்று. ஒரு குடும்பத்தில் ஒரு ஸ்திரீ இல்லை என்றல் அந்தக் குடும்பம் வெறும் பாலைவனம்தான்' என்றள் ருக்குவின் மாமியார்.

'அப்படியே யாராவது அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அந்தக்குடும்பத்தைக் கவனிப்பதாகவே வைத்துக்கொள்வோம். அவர்கள் ரொம்ப நல்லவர்களாகவே இருந்து தங்கத்தைவிட பத்து பங்கு அதிகமாகவே பரிந்து பரிந்து அந்தப் பசங்களுக்குச் செய்வதாக வைத்துக்கொள்வோம். என்னதான் இருந்தாலும் ஒரு தாயின் அன்பை எதிர்பார்க்கமுடியுமோ. அடித்தாலும் அணைத்தாலும் ஒரு தாய் தாய்தான், அதன் வழியே வேறுதான்' என்றள் ருக்கு.



க்ரூஸேட்ஸ் யுத்தங்களை நடத்தியவரும் 'சிங்க இருதயம்' என்ற புகழ்ப் பெயரையடைந்தவருமான இங்கிலாந்தின் மன்னர் ரிச்சர்ட்டின் சிலை கையிலிருந்த கத்தி ஜெர்மன் குண்டு விச்சால் சிதைந்துபோயிற்று. அதை பிரிட்டிஷ் சர்க்கார் அதிகச் செலவில் ரிப்பேர் செய்தார்கள்.

'அதுமாத்திரமில்லை. தங்கத்தின் அகமுடையானை எடுத்துக்கொள்வோம். இனி அவனுக்கு இந்த உலகத்தில் என்ன இருக்கிறது? வெறும் நடைப்பிணம் என்று சொன்னல் கொஞ்சம் கூட மிகையாகாது. அவன் இனி தன்னுடைய சுகதுக்கங்களை யாரிடம் அந்தரங்கமாகச் சொல்லிக்கொள்ள முடியும்? உத்யோகத்தில் ஒரு உயர்வு ஏற்பட்டால், அந்த சந்தோஷச் செய்தியைத் தங்கத்தினிடம் வந்து சொல்லிக்கொள்வதும், அதைக்கேட்டு அவள் பெருமைப்படுவதும் அவளுடைய அந்த ஆனந்தத்தைக் கண்டு இவன் பெருமிதமடைவதும் இனிமேல் இந்த உலகத்தில் வெறும் சொப்பனமாகவல்லவோ போய்விட்டதுஅவனுக்கு! கஷ்டம் வரும் காலத்தில் அதை மறைக்காமல் அவளிடம் சொல்லி அதற்கு அவள் கூறும் தைரிய மொழிகளைக் கேட்டு ஆறுதல் அடைந்து வந்தானே, இனி அந்தமாதிரி ஆப்த மொழிகளை யாரிடம் கேட்கமுடியும்? தன்னுடைய 'வாழ்வை'க்கண்டு உள்ளூர ஆனந்தப்படுகிறவர்கள் இனி இந்த உலகத்தில் அவனுக்கு யார் இருக்கிறர்கள்? தலையை வலிக்கிறது என்றல், உள்ளூர ஒரு பீதிகொண்டு தகுந்த சிச்ருஷை செய்யக் கூடியவர்கள் அவனுக்கு இனி யார் இருக்கிறர்கள?' இன்று வயிறு என்னமோபோல் இருக்கிறது. பசியே இல்லை என்றல் அதற்குத் தகுந்தமாதிரி ஆகாரத்தை யார் பரிவுடனும், பயபக்தியுடனும், அளிப்பார்கள் சொல் பார்க்கலாம்,' என்றள் ருக்குவின் மாமியார்.

'அவ்வளவென்ன? தீபாவளிக்கு ஆபீசில் 'பானஸ்

கொடுத்தால் அதற்கு ஒரு பட்டுப்புடவை வாங்கி தங்கத்தினிடம் கொடுத்து, அதை அவள் உடுத்திக்கொண்டு வாசலில் ஒய்யாரமாக நடந்து செல்லும்போது அதைப் பார்த்து உண்டாகிற ஒரு ஆனந்தம் இனி அவனுக்கு எந்தவிதத்தில் உண்டாகும் சொல் பார்க்கலாம்?' என்ருள் சரோஜா.

'வாஸ்தவமான விஷயம். உலகத்திலே மனுஷ்யனுக்கு இதுதானேடி ஆனந்தம்! அது போய்விட்டதென்ருல் அவன் வாழ்க்கையே வெறும் சூன்யம் தான்' என்ருள் ருக்கு.

'நீங்கள் சொல்கிறமாதிரி ஒரு குடும்பத்துக்கு ஒரு ஸ்திரீ எவ்வளவு முக்கியமானவள்?' என்ருள் சரோஜா.

'நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். இந்த ஆண்கள் பெண்களை அவ்வளவு அலட்சியமாய் நினைக்கிருர்களே, ஒவ்வொரு குடும்பத்திலும் டம்படாடோபம், விளம்பரம் இல்லாமல், அவர்கள் எப்படிப்பட்ட தொண்டு செய்து, எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருக்கிருர்கள் பார்த்தாயா என்பதைத் தெரியப்படுத்துவதற்காகத்தான் இவ்வளவு தூரம் சொன்னேன் என்ருள்' ருக்குவின் மாமியார்.

'அதற்குச் சந்தேகமென்ன மாமி. பெண்கள் இல்லை என்ருல் இந்த உலகம் ஏது மாமி?' என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டாள் ருக்கு.

'அவ்வளவென்ன? இனி தங்கத்தின் அகமுடையான் யாரை நிர்ப்பயமாய், ஸகஜமாய் வைவதோ, கோபித்துக் கொள்வதோ முடியும்? தங்கம் மாதிரி யார் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருப்பார்கள்?' என்ருள் சரோஜா.

எல்லாரும் 'கொல்' என்று சிரித்து விட்டார்கள்.

'ஹூம்! காலம் ரொம்பவும் கெட்டுப்போய்விட்டது. ஒரு நாளாவது பொழுது விடிந்தால் நல்ல ஸமாசாரம் காதில் கேட்போம் என்பதற்கு ஆசை இல்லாமல் போய்விட்டதே! திடீர், திடீரென்று எல்லாம் அல்பாயுசுகளாக அல்லவோ போய் விடுகிறதுகள்! 'கலி முற்றிவிட்டது. உலகத்திலே அக்கிரமம் அதிகரித்து விட்டது' என்று நான் சொன்னால் கர்னாடகம், ஏதோ பிதற்றுகிறது என்று பரிகாசம் செய்யப் போகிறதுகள்! முன்பெல்லாம் இப்படியா குடும்பங்களில் அநியாயச் சாவுகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன? என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் ருக்குவின் மாமியார்.

'கள்ள மார்க்கெட்டையும், கொள்ளை லாபத்தையும், லஞ்ச ஊழல்களையும் விசாரிக்க ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்களே லஞ்சம் வாங்க ஆரம்பித்தால் எப்படியிருக்குமாம் நியாயம்?' என்ருள் பானு.

வேலியே பயிரை மேய்கிற கதைதான் என்று சொல்லிக் கொண்டு எழுந்தாள் சரோஜா.



லண்டன் திரும்பிய மவுண்ட்பேட்டன் பிரபு அங்குள்ள இந்திய கடற்படையினரைப் பார்வையிடுகிருர். ஹை கமிஷனர் கிருஷ்ணமேனனும் படத்தில் காட்சியளிக்கிருர்.

நாமொன்று நினைக்க—.

ய. மஹாலிங்க சாஸ்திரி எம். ஏ., பி. எல்.

"மேலே நேற்று நடந்தது தான்."

"நேற்றா? நேற்று ஸினிமாவுக்கல்லவா போனாய்!"

"முதல் "ஷோ"வுக்கு டிக்கெட் கிடைக்காததால் பொழுது போக்கிற்காகப் பத்மா வீட்டிற்குச் சென்றேன்."

"அப்படியா?" என்றான் ஸீதாராமன் ஆச்சரியத்துடன்—சுவரில் சுரங்கக்கதவைக் கண்டு பிடித்தவன்போல்!

"பத்மாவைச் சினிமாவுக்கு அழைத்தேன். அவள் படிப்பை சாக்கிட்டு ஸினிமாவை நிராகரித்தாள். நான் படிப்பிற்குச் சமாதானம் சொல்லிச் சினிமாவை வற்புறுத்தினேன். அவள் தாயாரைக் கேட்க வேண்டுமென்றாள். தாயாரிடம் நானே உத்திரவு வாங்கித் தருகிறேன் என்றேன். அவள் நானே கேட்கிறேன் என்று உள்ளே போனாள். திரும்பிவந்தவள், இன்று கண்டிப்பாய் வரமுடியாது, தாத்தா வருகிறார் என்றாள். தாத்தாவா? என்று கேட்டுக்கொண்டு ஹாலில் இருந்த கிழவரின் படத்தைக் கவனித்தேன். ஆமாம். அவர்தான் என்றாள் பத்மா. எங்கேயிருந்து வருகிறார் என்று கேட்டேன். ஏதோ ஒரு ஊருக்கு வியவகார விஷயமாய்ப் போயிருந்தார். நாலைந்து நாட்களாக அவர் ஊரிலில்லை என்றாள் பத்மா. ஆனால் அவர் இங்கேயேதான் இருக்கிறாரா? என்று கேட்டேன். அவர்தான் "எங்கள் குடும்பத் தலைவர் என்றாள் பத்மா. நீ வராத போனால் நானும் ஸினிமாவுக்குப் போகவில்லை என்றேன். அப்படியானால் வீட்டிற்கே சென்றுவிடுங்கள் என்றாள் பத்மா. அதற்கென்ன அவசரம்? முதல் 'ஷோ' முடியும் சமயத்திற்குப்போனால் போதும் என்றேன். பத்மா மணி ஒன்பதாகிவிட்டது என்று ஜாடையாய்த் தெரிவித்தாள். இதற்குள் பக்கத்து ரூமில் பேச்சு வார்த்தை கேட்டது. தாத்தா வந்துவிட்டார் என்றாள் பத்மா. அவள் குரல் பயத்தினால் தடதடத்தது. அதே நிமிஷத்தில் மேலண்டை ரூம் கதவு திறக்கப்பட்டது. தாத்தா வாசற்படியில் வந்து நின்றார். அவர் என் பேரில் தொடுத்த பார்வை குரூரப் பார்வையாக விருந்தது. பத்மா முதலிலேயே எழுந்து விட்டாள். அவள் வேடனால் மூலை முடுக்கில் வளைத்துக்கொள்ளப்பட்ட மானைப்போல் மருண்டாள். நான் அலட்சியமாய் உட்கார்ந்துகொண்டிருந்தேன். கிழவனாருக்கு என்னைக் காணச் சகிக்கவில்லை போலும். அவர் கண்கள்தெரித்துவிடுபவைபோல் விழித்தன. "பத்மா! என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்றார் கிழவர் உறுதியான அதிகாரக் குரலில். பத்மா ஒன்றும் பேசவில்லை. "இவன் யார்" என்று அடுத்த கேள்வி பிறந்தது. கிழவர் குரல் இடி முழக்கம்போல் ஒலித்தது. அவர் கண்கள் கோபத்தால் ஜ்வலித்தன. நான் இருந்த சந்தர்ப்பத்தில் என்னை ஒருவர் குற்றவாளியாய் மதிக்கக்கூடும் என்ற உணர்ச்சி எனக்கு வந்தது. உள்ளக் கொதிப்புடன் எழுந்தேன். "நான் பத்மாவின் கிளாஸ்மேட், நீங்கள் யாராயிருந்தாலும் கோபித்துக்கொள்ளக்கூடிய காரணம் ஒன்றும் கிடையாது" என்று தைரியமாயும் பளிச்சென்றும் எடுத்துரைத்தேன். கிழவருக்குக் கோபம் மூக்குக்கு மேல் வந்துவிட்டது. பூமி அதிரும்படி ஒரு உதை உதைத்துக்கொண்டு எழும்பிக் குதித்தார். "கிளாஸ்மேட்டானால் பள்ளிக்கூடத்தில். இங்கே என்ன வேலை உனக்கு? அதுவும் இந்நேரத்தில்?" எனக்குச் சரியான ஜவாப்புச் சொல்லத் தோன்றவில்லை. அவர் முறைத்துப் பார்த்த பார்வை என்னை ஈட்டியால் குத்தி இழுப்பதுபோலிருந்தது. நான் மனம் கலங்கினேன். பத்மாவைப் பார்த்தேன். அவள் அங்கு இல்லை. மெல்ல வெளியே நழுவி விட்டாள் என்று உணர்ந்தேன். கிழவர், "நீ என்னவென்று நினைத்துக் கொண்டாய்?" என்ற கர்ஜனையுடன் ஒரு புலிபோல்திடீரென்று என்பேரில் பாய்ந்தார். என் சட்டைக் கழுத்தை ஒரு கையால் பிடித்துக்கொண்டு மற்றொரு கையை ஓங்கினார். அவர் பற்கள் நரநரவென்று சப்தித்தன. அவர் மீசை படபடவென்று துடித்தது. அவர் கண்கள் நெருப்பைக் கக்கின. அவருடைய உஷ்ணமான சுவாசம் என்பேரில் அனல் காற்றுப்போல் வீசியது. அவர் பிடித்த பிடி என்னை வலவலக்கச் செய்தது. என் கண்களில் நீர் நிரம்பியது. யமகிங்கரனிடம் அகப்பட்டுக் கொண்ட ஒரு பிராணியாகவே என்னை நினைத்துக் கொண்டேன். "என்னைவிட்டு விடுங்கள், என்னை விட்டுவிடுங்கள்! நான் ஒன்றும் தவறாக நடந்து கொள்ளவில்லை. உங்கள் பத்மாவையே கேட்டுக் கொள்ளுங்கள். விசாரிக்காமல் என்னை ஹிம்சிக்க வேண்டாம்." என்று அழுதுகொண்டே கெஞ்சினேன். கிழவர் என்னைப்பிடித்த பிடியைத் தளர்த்த விடாமல் என்னை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தார். "வைரப் பித்தான்! தங்கச் சங்கிலி! ரிஸ்டு வாட்சு! மோதிரம்! ஸில்குச் சட்டை! என்ன ஜோர்! என்ன மிடுக்கு! ராத்திரிப் பத்து மணிக்குமேலே!

—கிளாஸ்மேட் டைப்பார்க்க வந்தாரும்! யாரிடம் அளக்கிறாய்! பெரிய மைனராகத்தான் எண்ணம்போலிருக்கிறது?" —கழுத்தில் ஒரு அமுக்கு அமுக்கினார் கிழவர். மல்லயுத்தம் செய்யும் வஸ்தாத்தைப்போல் இருந்தது அவர் நின்ற நிலை! "ஐயோ! விட்டு விடுங்கள், நான் போகவேண்டும். என்று நான் அலறினேன். "போகவா? எங்கே போகிறது. உன்னை யார் விடப்போகிறார்கள்? நீ யாரைக் கேட்டுக்கொண்டு வந்தாய்?" என்று ஒரு உலுக்கு உலுக்கினார் கிழவர். எனக்கு துக்கத்துடன் கோபமும் வந்தது. பத்மா சமயம் பார்த்து ஒதுங்கி விட்டதில் ஏமாற்றமும் அடைந்தேன். கழுத்து இறுகும் வலி அதிகமாயிருந்தது. கிழவரின் முரட்டுக்கையை என் இருகைகளாலும் பிடித்துக்கொண்டேன். "நீர் என்னை என்ன செய்ய முடியும்?" என்று எதிர்த்துப்போராடினேன். "உஹூம்! உன் தொழிலுக்கு வீரம் வேறா? வா உனக்கு வழி சொல்லுகிறேன்." என்று உறுமிக்கொண்டு கிழவர் என்னைப் பக்கத்து ரூமுக்கு இழுத்தார். அந்த சமயம் பத்மா கண்ணும் கண்ணீருமாய் ஓடி வந்து, "தாத்தா! அவர் பெரிய மனுஷ்யர் வீட்டுப் பிள்ளை. ஒன்றும் குற்றமாய் நடந்து கொள்ளக் கூடியவரல்ல. நல்ல மதிப்பிற்குரியவர். அவரை விட்டு விடுங்கள்" என்று பரிதாபத்துடன் வேண்டிக் கொண்டாள். "இவனையா? விட்டு விடவா? போடி நீ உள்ளே. உனக்கென்னடி தெரியும்? இவன் பெரிய கள்ளன் அல்லவா? யார் வீட்டுப் பிள்ளையானால் எனக்கென்ன? இங்கு ஏன் வந்தான் இவ்வேளையில்? அக்கரையிருந்தால் அந்தப் பெரிய மனுஷ்யன் வந்து ஜாமீன் கொடுத்துவிட்டு அழைத்துப் போகட்டும்" என்று கர்ஜித்துக்கொண்டு கிழவர் என்னைப்பக்கத்து அறைக்குத் தள்ளிக்கொண்டு போனார். நான் "போலீஸ் போலீஸ்!" என்று கூவினேன். "சும்மாக்கிட! போலீஸில்தான் உன்னை ஒப்புவிக்கப் போகிறேன். பொழுது விடியட்டும்" என்று சொல்லிக் கொண்டு என்னை அறைக்குள் ஒரு கல்தா கொடுத்துத் தள்ளிக் கதவைத் தாளிட்டு விட்டார் கிழவர்."

ராமனாதனின் குரல் தடதடத்தது. அவன் வார்த்தைகள் குழம்பின. "ராமனாதா!" என்றான் ஸீதாராமன். அதற்கு மேல் என்ன சொல்லுவதென்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் நெஞ்சை அடைத்துக்கொண்டது துக்கம். அவன் கண்கள் கசிந்தன. அவன் கைகள் ராமனாதனின் கைகளைப் பற்றிக்கொண்டன—அந்தக் காரா கிருஹத்திலிருந்து நண்பனை விடுவிக்கும் பாவனையாய்! ஆபத்துக்கு உதவாத நண்பனாகத் தன்னை மனதிற்குள் ஸீதாராமன் வெறுத்துக்கொண்டான் போலும்! ராமனாதன் தீர்க்காலோசனையில்லாமல் சங்கடத்தில் சிக்கிக்கொண்டதற்குத் தன் கண்காணிப்பின் குறைவே காரணம் என்று வருந்தினான்போலும். உலகப்பாதையில் நடப்பவன் எவ்வளவு நுண்ணறிவு படைத்தவனாயிருக்க வேண்டுமென்றும், அன்றேல் எவ்வளவு எதிர்பாராத விபத்துக்கள் அவனை அமுக்கிவிடக் காத்திருக்கின்றனவென்றும் சிந்தித்து ராமனாதனிடம் இழுக்காயிருந்த கண்மூடித்தனத்திற்கு அனுதாபம் காட்டினான் போலும். தன்னிடம் ராமனாதன் முன்னிலும் குறையாத அன்பும், நம்பிக்கையும் வைத்திருப்பது பற்றித்தான் நடுவில் சிறிது சந்தேகப்பட்டதற்குப் பச்சாதாபத்துடன் அவனை மன்னிப்புக் கேட்க நினைத்தான்போலும்.

ராமனாதன் தன்னைத் தானே தேற்றிக்கொண்டு மேலே கதையைச் சொன்னான்.

"நான் அடைப்பட்டிருந்த ரூம் என் ஹிருதயத்தைப்போல் இருள் மண்டியதாயிருந்தது. அதன் சுவரில் எலெக்டிரிக் ஸ்விட்சு இருக்கிறதா என்று தேடி லைட்டைப்போட நான் துணியவில்லை. தரை மழமழப்பாயிருந்ததால் நல்ல தள வரிசையிட்ட இடமென்றும், காலில் ஒன்றும் தட்டுப்படாததால் அடைசலான இடமல்லவென்றும் உணர்ந்தேன். புழுக்கமில்லாததால் ஜன்னலிருக்கலாமென்று ஊகித்து ஆராய்ந்தேன். ஜன்னலோவென்று சந்தேகம் தோன்றிய இடத்தை அணுகித் தடவிப் பார்த்தேன். ஜன்னல் தான்! நான்கு கதவுகளுடைய பெரிய ஜன்னல். கதவுகள் நன்றாய்த் திறக்கப்படவில்லை என்று தெரிந்துகொண்டேன். ஆனால் அவை தாளிடப்படவில்லை. கதவுகளைத் திறந்தேன். வெளியே ஒரு நீண்ட கூடமாகவிருக்கலாமென்று தோன்றிற்று. அதிலும் வெளிச்சமில்லை. எலெக்டிரிஸிடியைச் சிக்கனமாய் உபயோகிக்கிறார்கள் போலும் என்று நினைத்துக்கொண்டேன். திடீரென்று யாராவது வந்து வெளிச்சத்தைப் போடலாமென்று எண்ணினேன். அப்படி வருகிறவர் யாராயிருக்கலாம்? என்று யோசித்தேன். பத்மா வரமாட்டாளா? என்னைத் தப்பிவிக்க வழி தேடமாட்டாளா? என்று ஏங்கினேன். வீட்டில் மனுஷ்ய சஞ்சாரம் இருப்பதாகவே தெரியவில்லை. நானிருந்த ரூமில் லைட்டை ஏற்றி உள்ளேயிருக்கும் பண்டம் பதார்த்தங்களைப் பரிசோதிக்கலாமா என்று பலதரம் எண்ணி எண்ணி தைரியமில்லாமல் இருளிலேயே பதுங்கினேன். லைட்டைப் போட்டால் கிழவன் வந்து விடுவானோ என்ற பயம் எனக்கிருந்ததுதான் காரணம். ஜன்னலோரத்தில் ஒரு பெஞ்சி கிடந்தது. அது காலியாயிருந்தது. அதில் உட்கார்ந்தேன். ஆனால் இருப்புக்கொள்ளவில்லை. மறுபடி பைத்தியம் பிடித்தவன் போல் எழுந்து நடந்தேன். ஜன்னல் வழியே கூடத்தை நூறு முறை கவனித்தேன். காலடிச் சத்தத்தை ஆயிரம் முறை நிதானித்தேன். லோகத்திற்குச் சதுர்யுகம் முடிந்து மஹாப்பிரளய காலம் வந்து எல்லாக்கூத்தும் ஓய்ந்த பிறகு தனித்து ஒரு பிராணி நின்றால் எப்படியோ அப்படியே என்னை நினைத்துக்கொண்டேன். கடைசியில் அந்தப் பெஞ்சியில் குப்புறப்படுத்தேன், உள்ளம் குமுறினேன். கைகளால் முகத்தை மூடிக்கொண்டு அழுதேன், நிசப்தமாய். இந்த துக்கவெள்ளத்தில் சில நிமிஷங்கள் மிதந்து சென்றிருப்பேன். ஏதோ காலடிச் சத்தம் இரண்டொரு தடவை கேட்டதுபோலிருந்தது. கை வளையல் குலுங்கும் சப்தமும் ஒருமுறை ஒலித்தது. ஜன்னலின் வெளிப் பக்கமாய் யாரோ வந்து நின்றதில் ஐயமில்லை. திடுக்கிட்டு 'யார்' என்று உளறினேன். கைவளை ஒலிப்புடன், "மெல்லப் பேசுங்கள் நான் தான்" என்ற பதில் வந்தது. "பத்மா" என்று மகிழ்ச்சியுடன் கூப்பிட்டேன். "இல்லை. உஷா" என்றாள் ஜன்னலருகே நின்றவள்.

அவள் மூச்சுக்காற்று என் பேரில் அடித்தது. அவள் அலங்கார பரிமளம் உள்ளே வீசியது. அவள் நகைகளின் சலசலப்பு வியக்தமாய்க்கேட்டது. "உஷாவா?" என்றேன் சற்றுத் தயக்கத்துடன். "ஆம். பத்மாவின் சித்தி பெண்" என்றபதில் கிடைத்தது. உடனே அந்தப்படத்தையும் வீணைகானத்தையும் நினைத்துக்கொண்டேன். "உஷா!" என்ன அழகிய பெயர் என்று எனக்குள்ளே சொல்லிக்கொண்டு, "பத்மா எங்கிருக்கிருள்" என்றுகேட்டேன். "பத்மா வரமாட்டாள். அவள் தாத்தாவுடன் சாப்பிடுகிருள். தாத்தா வெந்நீரில் ஸ்னானம் செய்துவிட்டு இப்போதுதான் சாப்பிட உட்கார்ந்தார்" என்று உஷா தாழ்ந்த குரலில் தெரிவித்தாள். "பத்மா என்னை விடுவிப்பதுபற்றி ஏதாவது சொல்லியனுப்பியிருக்கிருளா" என்று கேட்டேன். உஷா பத்மாவின் அந்தரங்க தூதியாயிருக்கவேண்டுமென்று என் மனதில் பட்டது. "பத்மா ஒன்றும் சொல்லியனுப்பவில்லை. அனுப்பவும் மாட்டாள். நான்தான் சொல்லவந்தேன்" என்ருள் உஷா. எனக்குப் புது அறிவு உதயமாயிற்று. என் நன்றி (உஷாவிற்காக) ஹிருதயம் கொள்ளாமல் ஊற்றெடுத்தது. பத்மாவின் பிம்பம் உருகி ஊற்றுப்பெருக்கில் கலந்துவிட்டது. "உஷா" என்று முதல் முதலாக வாயாற அவளை அழைத்தேன். "ஏன்" என்ருள் உஷா. எங்கள் ஹ்ருதயம் பரஸ்பரம் நிரவிக்கொண்டு ஒரே மட்டத்திற்கு நிரம்பி நின்றதாய் உணர்ந்தேன். "பத்மா என்னைப் பற்றிச் சிந்திக்கவில்லையா? நான் வெளியேறுவதெப்படி?" என்ற கவலையுடன் கேட்டேன் உஷாவை. "பத்மா தாத்தாவின் அடிமை. தாத்தா பணப்பேய். நீங்கள் சுதந்திரத்திற்குச் சுங்கம் கொடுத்தாலொழிய உங்களை அவர் விடமாட்டார். பத்மாவும் ஒன்றும் செய்ய முடியாது, நானும் ஒன்றும்செய்ய முடியாது" என்று அழுத்தம் திருத்தமாய்ப் பேசினுள் உஷா. "ஐயோ என்னிடம் ஒன்றுமில்லையே! நான் என்ன செய்வேன்?" என்று நான் பரிதவித்தேன். "இதோ அவர் சாப்பிட்டதும் உங்களிடம் வருவார். போலீஸில் ஒப்புவிப்பதாய்ச் சொல்லுவதெல்லாம் வெறும் உருட்டல். உங்களை ஹிம்ஸிப்பதெல்லாம் பணம் பறிக்கும் வழி. நாளைத் தருகிறேன் என்று உறுதி செய்து கேளுங்கள். தொகை எவ்வளவு கேட்டாலும் ஒத்துக்கொள்ளத்தான் வேணும். பத்திரம் எழுதிக் கொடுக்கச் சொன்னுலும்சொல்லுவார். காசு விஷயத்தில் காளகண்டன் அந்தக் கிழவன்" என்ருள் உஷா. அவள் பேச்சு எனக்கு ஆச்சரியமாயிருந்தது. பத்மாவின் மழமழப்பிற்கும் இந்தக் கண்டிப்பிற்கும் எவ்வளவு வித்யாசம் என்றுயோசிக்கலானேன். மேலும் ஒரு சந்தேகம் ஜனித்தது. சுவாதீனமாய், "உஷா" என்று கூப்பிட்டேன். "என்ன" என்ருள் அவள். ஜன்னல் கம்பியில் முகத்தை ஒட்டிக்கொண்டு "நீயும் அக்கிழவனுரின் பேத்திதானே" என்றேன். "ஆமாம். ஆனுல் நான் மற்றொரு விதத்தில் அடிமை. பத்மா அவர் ஆதரவைப் பெற்றவள். தாத்தாவிடம் பணம்குவிந்து கிடக்கிறது. பத்மாவின் தாயார் அவருக்குச் செல்வகுமாரி. பணமெல்லாம் அவர்களுக்கே கொடுக்கப் போகிருர். என் தாயாரிடம் அவருக்குப் பற்றில்லை. என் தாயார் தனியாய் வேறு ஊரில் இருந்து வந்தாள். போன வருஷம் என் அம்மா இறந்ததும், என்னை இவர்கள் சம்ரக்ஷணையில் எடுத்துக்கொண்டிருக்கிருர். என்னிடம் கசப்புத்தான். நான்தானே சம்பாதித்துப் பிழைத்துக்கொள்ள வேண்டும் என்று அடிக்கடி சொல்லுகிருர். என் தாயார் நகைகளைத்தவிர எனக்கு வேறு சொத்து கிடையாது. என்னை இரண்டு படி தாழ்த்தியே இந்த வீட்டில் நடத்துவார்கள். எனக்கு சாப்பாடு போடுவதே அதிகப்படி என்று நினைத்து என் பிதாவிடமிருந்து எனக்கு ஜீவனும்சம் பெற முயற்சித்துக்கொண்டிருக்கிருர். தாத்தா அதற்காகத்தான் இப்போதுகூட எங்கேயோ போயிருந்தார். என்னுல் கவலைகளும் கஷ்டங்களும் செலவும் தொந்தரவும் அதிகமாயிருப்பதாய்ப் பெரியம்மாவும் அலுத்துக்கொள்வாள். பத்மாவுக்கு என்னிடம் அன்பு உண்டு. ஆனுலும் பணக்காரத் தாத்தாவின் மனம் கோணுமல் தான் நடந்துகொள்வாள். பத்மாவைப் பூராவாக நம்பிவிட முடியாது." என்று முடித்தாள் உஷா. "நீ சாப்பிட்டாகிவிட்டதா?" என்றுகேட்டேன். "இல்லை. அவர்கள் சாப்பிட்டு ஆனபிறகு தான் எனக்கு சாப்பாடு. ஒரே பந்தியில் என்னை உட்



காரவைத்துக்கொள்ள மாட்டார்கள். வேலைக்காரியுடன்தான் நான் சாப்பிடுவேன்.'' என்றாள் உஷா. அவள் த்வனியில் சோகம் இல்லாதிருந்தது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. என்ன உறுதி! என்ன துல்யமான மனோநிலை! என்ன திடசித்தம்! எவ்வளவு ஆழ்ந்த கருத்து! என்ன பெருந்தன்மை! ஸ்திரீ ரத்னம் அல்லவா உஷா. "உஷா!' என்ன அழகிய பெயர்! பெயருக்குத்தகுந்தபடி என்ன என்ன அழகு! இவள் முதலில் கதவில் பக்கத்தில் காக்ஷியளித்தபோது ரம்பையோ, திலோத்தமையோ என்றல்லவா பிரமித்தேன்! அவ்வளவு அழகும் அந்த இருள் மூட்டத்தில் மேகத்தினின்று வெளிவராத மின்னல் போல் ஒளிந்து கிடக்கிறது. பத்மாவையும், உஷாவையும் ஒப்பிட்டுப் பார்க்கவும் நியாயமில்லையே. ஊன்றிப் பார்த்தால் பத்மாவின் முகமும் தோற்றமும் புருஷச் சாயையை அனுசரித்தது! எப்போதும் உத்கிருஷ்ட வஸ்துவின் ஞானத்தால்தான் நிகிருஷ்ட பதார்த்தத்தின் உண்மையான அந்தஸ்து அறிவுக்கு எட்டுகிறது!..."உஷா! நீ என்னைக் காப்பாற்ற வந்த ஒரு தேவதை என்றே உன்னை நான் மதிக்கிறேன். உன்னிடம் என்றும் நன்றி மறவேன். உன்னை என் ஆவியின் அதிதேவதையாகவே என் மனம் நினைக்கிறது. யாராவது வந்துவிடப் போகிறார்கள், நீ போய்விடு. நான் கிழவருக்குத் திருப்தியானதை என் அந்தரங்க திருப்தியுடன் கொடுத்து என்னை விடுவித்துக்கொள்ளுகிறேன். கிழவரும் எனக்கு உபகாரம்தான் செய்திருக்கிறார். அவரிடம் எனக்கு உண்டான ஆத்திரம் பறந்துபோய்விட்டது. என்னை மறந்துவிடாதே உஷா! நாம் முகம் தெரியாத இருட்டில் பேசுகிறோம். இந்த இருள் ஒரு சமயம் விலக வேண்டியதுபோல் நம் இடையே உள்ள இடையூறுகளும் விலகிவிடும் என்று நம்பு. உஷா! உன் கையைக் கொடு'' என்று நான் என் மனத்தை உடைத்துக்கொண்டு வந்த உணர்ச்சி வெள்ளத்தைக் கண்டிப்புடன் அடக்கிக்கொண்டு மெல்லக் கம்பி வழியே கையை நீட்டினேன். உஷா குனிந்துகொண்டு பேசிக்கொண்டிருந்தாள்போலும். அவளுடைய வெல்வெட்போன்ற கபோலம் கையில் பட்டது. அதை ஸ்பர்சித்த என் கையை நான் முத்தமிட்டுக்கொண்டேன். அப்போது அவள் கை என் கரத்தை மெள்ளப்பற்றியது...கூடத்துக் கோடியில் வெளிச்சம்நடமாடுவது தெரியவந்தது. உஷா, "நான் வருகிறேன். ஜாக்கிரதை''என்று சொல்லிவிட்டு விரைவில் நகர்ந்தாள்.

நான் ஜன்னலினின்று எட்டிப்போய்த் தரையில் படுத்துக்கொண்டேன். டார்ச்சு லைட்டுடன் கிழவன் வருவதை நன்கு உணர்ந்தேன். கிழவன் ஜன்னல் வழியாய் டார்ச்சு வெளிச்சத்தில் என்னை ஆராய்ந்தான். நான் நிமிர்ந்து பார்க்கவில்லை. "ஓய்! எழுந்திருங்காணும்! இப்படியே ராத்திரி முழுவதும் குந்தியிருக்கப் போறயா?'' என்று வரட்டுக் குரலில் என்னை வெகுண்டை செய்தான் கிழவன். உடனே கூடத்தில் ஸ்விட்சைத்தட்டி எலெக்டிரிக் விளக்கையும் போட்டான். கூண்டில் விழுந்த எலி வெளிச்சத்திற்குக்கொண்டு வரப்பட்டதும் பதுங்குவதுபோல் நான் பதுங்கினேன். "உமக்கு வீட்டுக்குப் போக வேண்டுமானால் ஆயிர ரூபாய் அபராதத்தைக்கொடுத்து விட்டுப்போகலாம்; இல்லாவிட்டால் போலீஸில் மாட்டிவிட்டு உம்மானத்தைச் சந்தியில்இழுத்து விடுவேன்,என்ன சொல்லுகிறீர்?'' என்று அதட்டினான் கிழவன். நான் எழுந்து உட்கார்ந்து அவனை முறைத்துப்பார்த்தேன். உஷாவின் உபதேசத்தை நினைத்துக்கொண்டேன். மேலும், உஷாவை உத்தேசித்துக்கிழவனிடம் நட்புக்கொள்ள விரும்பினேன். "என்னிடம் இப்போது என்ன இருக்கிறது? நோட்டு வேண்டுமானால் ஆயிர ரூபாய்க்கு எழுதித் தருகிறேன். நாளைக்குப் பணம் கொடுத்து நோட்டைத் தீர்த்து விடுகிறேன் என்று பணிந்து கேட்டுக்கொண்டேன். அதற்குள் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த கிழவன் என் முன் நின்றுகொண்டு சிரித்தான். அது விகாரமான சிரிப்பு. அவனுடைய கோரமான பற்களை உடைத்து விடவேண்டும்போல் எனக்கு ஆத்திரம் வந்தது. "நோட்டாவது, கீட்டாவது? இந்தக் கிழவனை ஏமாற்றப்பார்க்கிறீரே! ஐயா! உன் பேரில் இருக்கிற கடியாரம், பித்தான், மோதிரம் இவைகளைக் கழற்றிக் கொடும்'' என்றான் நிர்தாட்சண்யமாய்க் கிழவன். இவைகளைக் கழற்றிக் கொடுத்துவிட்டால் யாரும் சந்தேகிப்பார்களே என்று தயங்கினேன். கிழவன், "வேறு வழியில்லை'' என்று தலை அசைத்தான். எனக்கும் அப்படித்தான் தோன்றிற்று. விடியும் முன் வீடு போய்ச் சேர்ந்தாக வேண்டுமே! "நான் நாளைக்கே பணத்தைக் கொடுத்து விட்டால் இவைகளை மீட்டுக்கொள்ளலாமல்லவா'' என்று நிபந்தனையை வேண்டிக்கொண்டேன். "ஆயிர ரூபாயைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுக் குசாலாய் எப்போது வேண்டுமானாலும் மீட்டுக் கொள்ளும்'' என்றான் கிழவன். நான் ஒவ்வொன்றாய் வைரப் பித்தான்களையும், கப் பட்டன்களையும், வைர மோதிரத்தையும் தங்கச் சங்கிலியுடன் கைகடியாரத்தையும் கழற்றிக்கொடுத்தேன். கிழவன் வெகு திருப்தியுடன் எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு "ஏன் ஐயா! வைரக் கடுக்கன் நீர் போட்டுக்கொள்ளவில்லை? பணக்காரங்களாச்சே!'' என்றான் பல்லை இளித்துக்கொண்டு. "அடுத்த தடவை வந்தால் அதையும் போட்டுக்கொண்டு வருகிறேன்' என்றேன் நான் வயிற்றெரிச்சலுடன். கிழவன் என்னை வழி கொண்டு வந்துவிட்டான். கும்பிடும் போட்டு அனுப்பினான். "நாளைப் பத்து மணிக்குமேல் பணத்துடன் வருவேன். என் சாமான்களை நான் திரும்பிப்பெற வேணும்'' என்று கண்டிப்பான குரலில் மறுபடி கேட்டேன். "நல்லது தம்பி' என்றான் வெற்றியினால் குஷி பிறந்த கிழவன். ராமநாதன் சற்று ஆச்வாசப்படுத்திக் கொண்டான்.

(தொடரும்)



மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப் பூங்கோயிலில்

14

கடுமையான பரீட்சை

★

பி. ஸ்ரீ.

மாறனார் என்னும் வேளாளர் ஒருவர், சிவபக்தி சிவனடியார் பக்திகளில் சிறந்து விளங்கினார். மாறன் என்பது பாண்டியனைக் குறிக்கும் பெயர்களில் ஒன்று. இப்பெயர் அந்நாளில் வேளாளர்களாலும் வழங்கப் பட்டுவந்தது என்பதற்கு'மாறன்' என்றும். 'மாறனார்' என்றும் ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வார் குறிக்கப்படுவதும் ஒரு சான்றாகும். அந்த மாறனார் பிறவித் துறவியாய் வைணவர்களின் ஞான சிகரத்தில் நிற்கிறார். இல்லறத்தில் நின்று, சைவத்தின் தியாக சிகரத்திலே நிற்பவர்களில் இந்த மாறனாரும் ஒருவர்.

குபேரர் குசேலரானார்!

வேளாளர் வேளாண்மையைத் தங்கள் முக்கியமான தொழிலாகக் கொண்டு, நிலத்தைப் பண்படுத்தியதுபோல் உளத்தையும் பண்படுத்தி வந்தனர்.

மாறனார் பக்தியால் இதயத்தையும் பண்படுத்தி வந்தார். இவருக்கு வேளாண்மையில் ஏராள வருவாய் கிடைத்தது. இந்தச் செல்வத்துடன் பக்திச் செல்வமும் அதிகரித்து வந்தது. இவர் இளையான்குடி என்ற ஊரில் வசித்ததால் இளையான்குடி மாறனார் என்று பேர்பெற்றிருந்தார். இவர் மனைவி உண்மையான வாழ்க்கைத் துணையாக உதவினாள்.

இளையான்குடியில் 'குபேரனாக' வாழ்ந்தவர் திடீரென்று 'குசேலரா'கி விட்டார். ஆனால் வளம் சுருங்கியும் உளம் சுருங்கவில்லை; தொண்டர்பணி செய்த வண்ணமாயிருந்தார். தம் பொருள்களையெல்லாம் விற்று விற்றுத்தொண்டாற்றி வந்தார். வறுமையின் கொடுமை அதிகரித்தது.

விருந்தும் வந்தது

மழைக்கால இரவு. மாறனார் பசித்திருந்தார், விழித்திருந்தார். பட்டினியால் உறக்கம் பிடிக்கவில்லை. மனைவியும் பட்டினிதான், அப்போது அடியவர் ஒருவர் சொட்டச் சொட்ட நனைந்துகொண்டு வந்து கதவைத் தட்டினார். மாறனார் கதவைத் திறந்து விருந்தாளியின் ஈரமேனியைத் துடைத்து வீற்றிருக்கச் செய்தார். இவருக்கே பசி முறுகி எழுந்து வயிற்றைக் குடைகிறது. தம் பசியைப் பொறுத்துக்கொண்டாலும் அவர் பசியைப் பொறுக்க முடியவில்லை!

ஆனால் வீட்டில் உணவு இல்லையே! அந்த இரவில் என் செய்வது? மனைவியோடு ஆலோசனை செய்தார். அம்மைக்கும் ஒன்றும் தோன்றவில்லை.

மாது கூறுவள்:

'மற்றொன்றும் காண்கிலேன்'
ஏதிலாரும்
இனித்தரு வாரில்லை;
போதும் வைகிற்று,
போம்இடம் வேறிலை;
தீது செய்வினை- [என்று.
யேற்(கு)என் செயல்?'

[ஏதிலாரும்—அயலாரும். போதும் வைகிற்று—பொழுதும் கழிந்து நெடுநேரம் ஆயிற்று. தீது செய்வினையேற்கு—தீவினையால் இந்த நிலையை அடைந்திருக்கும் எனக்கு. என் செயல்—செய்யத்தக்கது என்ன இருக்கிறது.]

அதிசய தம்பதிகள்

இப்படிச் சொல்லிக்கொண்டே அந்த அம்மாள் ஆலோசனையில் ஆழ்ந்தாள். அப்போது கணவருக்கும் தோன்றாத ஒரு யுக்தி இவள் உள்ளத்தில் தோன்றியது. 'இன்று வயலிலே (அந்த வயல் ஒன்றுதான் இப்போது இவர்களுக்கு உள்ளது) நெல் விதைத்தோமே, அந்த நெல் முளையை வாரிக்கொண்டு வந்தால் அமுதாக்கி விருந்தினரின் பசி போக்கலாம்' என்றாள். என்ன அபூர்வ ஆலோசனை! என்ன அதிசய ஞாபகம்!

நெல் விதைத்திருந்தது மாறனாருக்கும் தெரியும். இவர் தாமே விதைத்து வந்தவர்? எனினும் இந்த நினைவு இவருக்கும் வரவில்லையாம். எந்தக் கொடிய வறுமை நேர்ந்தாலும் எந்தக் குடியானவன் தான் விதை நெல்லைச் சமைக்க ஒருப்படுவான்? இதுவோ ஏற்கெனவே விதைக்கப்பட்ட நெல்! எனவே, பக்தியின் எல்லையில் நின்று எத்தகைய தியாகத்தையும் செய்யத் துணிந்த இந்த வள்ளலாருக்கும் அந்த ஆலோசனை தோன்றாததில் அதிசயமில்லை. ஆனால் அம்மாள் நினைப்பூட்டியதும், பெருஞ்செல்வம் பெற்றதுபோல் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது மாறனாருக்கு.

வள்ளன்மையில் — தியாக புத்தியில்- இப்போது ஸதி, பதியையும் வென்றுவிட்டாள்! இத்தகைய ஸதியால் உருவாகிய வாழ்க்கை இம்மாறனாரின் தியாக வாழ்க்கை என்று ஊகிப்பதும் தவறாகாது.

மாறனாரும் கர்ணனும்

மாறனாரின் மனைவியாருக்குத் தோன்றிய இந்த வண்மை யுணர்வைச் சரியாக மதிப்பிடுவதற்கு, கர்ணனைக் குறித்து வழங்கும் அதிகக் கதையொன்றை இங்கே ஞாபகப்படுத்திக்கொள்வது நலமாகும். அந்த நிகழ்ச்சியும் மாரிக் காலத்து இரவில் நிகழ்ந்ததுதான். ஒரு யாசகன் உலர்ந்த விறகு வேண்டுமென்று யாசிக்கிறான். 'எங்கள் அரண்மனைக்குத் தேவையான விறகுக் கட்டைகளும் நனைந்து போய்விட்டனவே! உலர்ந்த விறகிற்கு எங்கேபோவது? போ வெளியே; அடா சேவகா!' என்று கர்ஜிக்கிறான் துரியோதனன், 'உலர்ந்த விறகிற்கு என் செய்வது?' என்று தருமனும் வருந்துகிறான்' தயங்குகிறான். கர்ணனுக்கு மட்டும் ஒரு யுக்தி தோன்றுகிறது. என் அரண்மனையிலுள்ள உத்தரக் கட்டைகள் உலர்ந்த விறகுதானே!' என்று எண்ணி, அரண்மனை இடிந்து விழுந்தாலும் பாதகம் இல்லையென்று அவற்றை முறித்துக்கொடுக்கிறான். தருமனது தருமபுத்திக்கும் எட்டாத அபூர்வ ஆலோசனை அல்லவா?



அந்தக் கர்ணனுடைய வள்ளன்மைக்கு எந்த அம்சத்திலும் குறைந்ததில்லையே இளையான்குடிமாறனாரின் தியாகம்: அது மகாபாரதத்தில் இல்லாத ஒரு பிற்காலக் கற்பனைதான். இந்த மாறனாரின் வரலாற்றிலிருந்தே அந்தக் கதையும் கிளைத்துப் போயிருக்கலாம்.

கூடையே குடை!

சரி; கர்ணனும் மழைபொழிந்த அந்த இரவில் அந்தப் பெரிய அரண்மனையின் ஒரு பகுதியில் நனையாமல் இருந்துகொண்டே வேறொரு பகுதியிலுள்ள உத்தரங்களைப் பிரித்தான். மாறனாரோ மழை பொழியும் நள்ளிரவிலே ஒரு குடையுமில்லாமல் (ஓலைக்குடைகளை விற்றும் அதிதி பூசை நடந்திருக்கவேண்டும்!) கூடையொன்றைக் கவிழ்த்துக் கொண்டு வயலுக்குப் புறப்பட்டார்! நெல்முளைகளை வாரிக் கொண்டு வரவேண்டிய கூடைதான் இப்போது குடையாக உதவுகிறது!

தியாக புத்தியே புத்தி

கால்களினால் தடவித் தடவிச் சென்று மாறனார் தம் வயலை அடைந்தார். இப்போது நெல் முளைகளைக் கல்வி எடுக்கவேண்டிய சிரமம் இவருக்கு ஏற்படவில்லை. அந்த மழை நீரிலே நெல் முளைகள் மிதந்துகொண்டும், நீர் வழி ஒதுங்கியும் இருந்தன. அவற்றையெல்லாம் விரைவில் சேர்த்து வாரிக் கூடையை நிரப்பித் தூக்கிச் சுமந்து வந்தார் மாறனார், மழையில் முழுக்க நனைந்தவராய்.

அந்த நெல்முளைகளைக் கழுவும் போதே 'அடுப்புமூட்ட விறகும் இல்லையே'என்ற ஞாபகம் வந்தது அம்மாளுக்கு ஆனால் இப்போது இந்த அம்மாளின் தியாக புத்திக்கும் யுக்தி தோன்றவில்லை. மாறனாருக்கும், மூளை வேலை செய்து யுக்தி கண்டது என்று சொல்லமுடியாது. ஆனால் அந்தக் கொடைக்கை ஓர் உள்ளுணர்ச்சி பெற்றது: பெற்றதும் அரிவாளை எடுத்து வீட்டின் வரிச்சுக் கொம்புகளை அறுத்துத் தள்ளியது! (இப்போது தெளிவாகிவிட்டதல்லவா கர்ணனின் அதிகக் கதை இரவல்தான் என்பது?)

அந்த விறகுகளை மனைவி அடுப்பில் மாட்டி, ஈரமான நெல் முளைகளை வறுத்து அரிசியாக்கி, உலையிற் பெய்து சோறாக்கினாள். அமுது ஆகிவிட்டது, கறிவேண்டுமே, என் செய்வது? இப்போதும் யுக்தி தோன்றியது, மாறனாருக்குத்தான். புறக்கடையில் பூசினி, சுரை முதலிய குழிப்பயிர் போட்டிருந்தார். அங்கே போய்க் குழி நிரம்பாத அந்தப்புன்செய் குறும் பயிர்களைத் தட-

விப் பறித்துக்கொண்டு வந்தார்.

"வழிவரும் இளைப்பி னோடும்,
வருத்திய பசியி னாலே
அழிவுறும் ஐயன்' என்னும் [று,
அன்பினில் பொலிந்து சென்
குழிநிரம் பாத புன்செய்க்
குறும்பயிர் தடவிப், பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப்
பறித்(து)அவை கறிக்கு நல்க.

[ஐயன்-விருந்தாளியாக வந்திருக்கும் சிவனடியார்.]

தியாகிகளின் மேதை இது! தியாக புத்தியே புத்தி!

உறங்கினர், மறைந்தார்

குழிப் பயிர்களை நாயனர் தடவிப் பறிக்கும்போதே, தம் பாச வேரையும் பறித்து விடுதலை பெற்று விட்டாராம். மனைவி அவைகளைக் கழுவித் தன் 'சமையல் ஞான'த்தால் பலவகைக் கறியமுதாக்கி விட்டார். இதற்குள்ளே அடியவர் இளைப்பினலும் பசியினலும் ஓய்ந்து உறங்கிக்கொண்டிருப்பது போலக் காணப்பட்டார்.

மாறனர் அவரை அமுதுசெய்ய அழைத்தார். அப்போது ஏன் இந்தத் திகைப்பு இவர்களுக்கு?

'அழுந்திய இடருள் நீங்கி
அடியனே உய்ய, என்பால்
எழுந்தருள் பெரியோய்! ஈண்ட
அமுது செய்தருள்க' என்று
தொழும்பனர் உரைத்த போதில்,
சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாரும்
தொண்டரும் திகைத்து
நின்றார்]

[தொழும்பனர்-அடியவராகிய மாறனர்.]

உறங்குவதுபோல் இருந்த அந்த அடியவர், இந்த அடியவரைத் தான் பரீட்சை செய்து பார்த்தாகி விட்டதே! அமுது செய்யவா வந்தார்? விடுதலையமுதம் வழங்க வந்தவரல்லவா? விருந்தாளி மறைந்து விட்டார்,

விடுதலை

ஒரு ஜோதி தோன்றியது. லதிபதிகள் திகைத்து நிற்கும்போதே அம்மையப்பர் தோன்றி. 'அன்பர் பூஜை செய்த நீங்கள் விடுதலை பெற்றீர்கள்' என்றாராம்.

பெரிய புராணத்திலுள்ள அதிசயமான பகுதிகளில் ஒன்று இளையான் குடிமாற நாயனர்வரலாறு. விடுதலை பெற்றிருக்கும் நம் தமிழகத்திற்கு எதிர்கால மகோன்னத வாழ்விலும் ஒரு மகத்தான லட்சியமாக உளளத்தை வசமாக்கி மலரச் செய்யத்தக்கது இவ்வரலாறு. நாட்டுக்கு உண்மையான விடுதலை, இம்மாறனரை ஒத்த தேசபக்த நாயனர்களின் தியாக நெறியிலேதான் கிடைக்கக்கூடும்.

———

கேச விருத்திக்கு சிக்கன சுலப சாதனம்
காஷ்மீர்-குஸும்
வேண்டிய எண்ணையில் கலந்து கொள்க
குடும்ப சரும-சஞ்சீவி
ஸான்டலக்ஸ்
நருமண சந்தனக்கட்டிம்பு
மைசூர் M.R. ஜெட்டப்பாவின்
பிரேமலீலா
உயர்தர ஊதுவத்திகள்
ஸோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதராஸ்.1
டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

சுதந்திரதினத்தன்று

வாடிக்கைக்காரர்களுக்கும்

நண்பர்களுக்கும்

எங்களுடைய மனமார்ந்த

வாழ்த்துக்கள்

★

குகன்

சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

தேச சேவையில் ஒரு தேசிய
கைத்தொழில் ஸ்தாபனம்

ஜாதகம் ! ஆரூடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்ட்ரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?
இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ்.
லக்ஷிமி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

ஸ்ரீலஸ்ரீயாழ்ப்பாண சுவாமிகளின் மருந்து

நாகபஸ்பம் ஒன்பதுவகை மூல வியாதிகளையும் குணப்படுத்தி மூலாதாரத்தை குளிர்ச்சிபண்ணும்—ஆப்ரேஷன் தேவையில்லை—மூல முளையைக் கரைத்துவிடும்.

No. 1 நாகபஸ்பம் & காட்டுகருணைலேகியம் 12-நாள் செட் ரூ. 5/-

தங்கபஸ்பம் நாடி, நரம்புகளை வலுப்படுத்தி இரத்தப் பெருக்கை உண்டுபண்ணும். வயோதிகரும் வாலிபம் பெறலாம். அழகு தரும். பலவித வைடமின் டானிக்குகள் உபயோகித்து ஏமாற்றமடைந்தவர்கள் இதனால் சரீர புஷ்டியடைந்திருக்கிறார்கள்.

தங்கபஸ்பம் & ஸ்ரீ மகா போகர் லேகியம் 21 வேளைக்கு ரூ. 10.

யாழ்பாண வைத்யசாலை — பழநி.

Lovely long hair

100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது. மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம வளர உதவும்

VIJAYA CHEMICAL & TOILET WORKS
21 & 22 Suriyanarayana Chetty St, Royapuram, Madras.

பிரசித்தி பெற்ற

'காஸினோ ஸ்னோ'

உங்கள் முகப்பருவைப் போக்கி சருமத்தை மிருதுவாக்கி முகத்தைப் பொலிவுடன் பிரகாசிக்கச் செய்வது காஸினோ ஸ்னோவே' வாங்கும்பொழுது "காஸினோ' மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST., G.T. MADRAS 1

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸவரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

S.A.H

TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

ஸ்தாபிதம் 1924

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்து விடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4

ஸ்ரீ தன்வந்திரி கவசம்

வியாதி, மனோவிசாரம, தரித்திரம இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதி ஸரஸூத்ரம், ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸதாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்

பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்.

40-நாள் மருந்து ரூ. 3-12-0.

பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

ஜமதக்னி ஔஷதாலயா,

26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

மாதர்தம் மகத்துவத்தை
எளிதாக எண்ணாதே!
கவர்ச்சி மிக்க இக்
காதல் சித்திரம்
உங்கள் உள்ளத்தைக்
கொள்ளைக் கொள்ள
வெகு சீக்கிரத்தில்
வெள்ளித் திரைக்கு
வருகிறது
மோகினி
ஜூபிடர்
தயாரிப்பு
ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட்
மதராஸ் &
திருப்பூர்



உங்கள் எதிர்காலம்



பணநிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணு 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.

தேவை

★

லைப் இன்ஷ்யூரன்ஸ் வியாபாரத்துக்கு நல்ல வசிகர நிபந்தனைகள்பேரில் அனுபவமும், செல்வாக்கும் உள்ள ஏஜண்டுகளும், ஆர்கனைஸர்களும் தேவை.

★

விண்ணப்பிக்கவும்:

கே. கே. ஐயங்கார்,
டிவிஷன் மானேஜர்
310 / 311, லிங்கி செட்டி தெரு,
தபால் பெட்டி நெ. 240,
மதராஸ் 1.

பிரசுரமான கிருதிகள்

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப் படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்,

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை.

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்னான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதிஉஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினுலோ வேலையினுலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்
அஷ்டாங்க ஆயுர்வேதசாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம் : 1936.)

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை

இரண்டாம் பாகம்	,,	ரூ. 2.
மூன்றும் பாகம்	,,	ரூ. 2.

(தபாற் செலவு அணு 10.)

முன்பணம் அனுப்பவேண்டும். V. P. P. அனுப்புவது கிடையாது.

மானேஜர் :- சுதேசமித்திரன் புத்தகசாலை, மவுண்ட்ரோட், மதராஸ்.

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.
போன் நெ. 3432.

9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

இந்தியாவின் புகழ்



லோத்ரா

கர்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS.394

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :—

ஸீதாராமா
ஜெனரல் ஸ்டோர்ஸ்,
பர்ஹாம்பூர்--செகந்திராபாத்
பெஜவாடா — மதுரை.

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஸ்ரீ சாயிநாதய நம:

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ. 5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	,, 1.
விவாக பொருத்தம்பார்க்க	,, 3.
ஆயுள் பலன் எழுத	ரூ. 100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.

அழகிய பித்தளை, தாமிர, வெண்கல பாத்திரங்களுக்கு கோவையில் சிறந்த இடம்.

பள்ளிக்கூட ஹாஸ்டல்கள், காண்டின்கள் இன்னும் சர்க்கார் இதர ஸ்தாபனங்களுக்கும் சப்ளை செய்பவர்கள்

K. இராமச்சந்திரன்,
பாத்திர வியாபாரம்,
பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்,
ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

Printed and Published by S Chakrapani Iyengar at the Victory House, Mount Road, Madras. Editor; C. R. Srinivasan B. A.

ரீடா

அழகிய கேசத்தை வளர்க்கிறது

ரீடா, கூந்தல் ஆரோக்கியத்தில் ஒரு புது முறை. அது கூந்தல் வேர்களுக்குத்தேவையானஇயற்கை போஷாக்கு களையூட்டி, பொடுகு வழுக்கையைத் தடுத்து அபார வசீகரத் தோற்றமுள்ள பட்டுப்போன்ற மிருதுவான கூந்தலை அடர்த்தியாக வளரச்செய்கிறது. அது பறட்டையான கூந்தலுக்கு பள பளப்பு அளிப்பதுடன் இஷ்டத்திற்குகந்தவாறு கூந்தலை படியவைப்பதற்கும் சிறந்தது. ஒரு புட்டி ரீடா வாங்கி உங்கள் கூந்தலுக்கு புத்துயிரளித்து புது அழகு பெறச் செய்யுங்கள்.

எங்கும் கிடைக்கும், ஒரு புட்டி விலை அணா 15.

ஹிந்தி, ஆந்திரா, தமிழ், கன்னட சினிமா நக்ஷத்திரங்களெல்லோரும் போற்றுகின்றனர்.

லலிதா பவர்:—மிகச்சிறந்த கூந்தல் டானிக், தேவையுள்ளோர் அனைவருக்கும் ரீடாவையே சிபார்சு செய்வேன். நம்தாய் நாட்டில் இவ்வளவு அருமையான சரக்கு களை தயாரிப்பதுபற்றி பெருமையடைகிறேன்.

சாரதா ஜுனர்கார்:—எனது சமீபத்திய அனுபவம் இது. கூந்தல் உதிர்வதை நிறுத்துவதற்கு ரீடாவைப்போன்ற அற்புத டானிக் வேறு கிடையாது. கேசத்தைப் பட்டுப்போல் மிருதுவாக்கி பளபளப்பூட்டும் அற்புத மூலிகைகள் இந்த தைலத்தில் இருக்கின்றன. கேச டானிக்குகளில் ரீடா மிகச்சிறந்தது என்பது உறுதி.

கே. ஈச்வர்லால்:—நான் ஒருமுறை ரீடா உபயோகித்தேன். அது முதல் என் குடும்பம் முழுவதும் ரீடாவையே உபயோகித்து வருகிறோம். தைலங்களில் ரீடா ஹேர் டானிக் மிகச்சிறந்தது என்பதை நண்பர்கள் அறிவது திண்ணம்,

சுஷில் குமார்:—நான் ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன். என் கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவிபுரிகிறதாகக் கண்டேன். மயிர் உதிர்வதை நிறுத்துவதற்கும், மூளை குளிர்ச்சிக்கும் நான் இதை யாவர்க்கும் சிபார்சு செய்கிறேன்.

ஜயந்த்:—நான் கடந்த சில மாதங்களாக ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்ததில் அது சிறந்த தைலம் என கண்டேன், ஸ்திரீகளின் கூந்தல் வளர்ச்சிக்கு ஏற்ற டானிக். ஆடவர்களின் கூந்தலைப் பாதுகாக்க சிறந்த டானிக்.

கண்ணாம்பா:—ரீடா எல்லாவிதத்திலும் சிறந்தது என மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். அது உண்மையாய் அவ்வளவு பயனுள்ளது.

புஷ்பவல்லி:—ஒரு வருஷ காலமாக என் மயிர் உதிர்ந்துகொண்டே இருந்தது. ரீடா உபயோகித்ததிலிருந்து மயிர் கொட்டுவது நின்றது. ரீடா என் கூந்தல் அழகைப் பாதுகாக்க உதவி புரிந்தது. ரீடா ஒரு சிறந்த கூந்தல் டானிக் என்பதே என் அபிப்பிராயம்.

சூர்ய குமாரி:—ரீடா நறுமணமுள்ளது, அதை தடவிக்கொண்டால் குளிர்ச்சியையூட்டுகிறது. நான் இனி ரீடாவையே உபயோகிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன்.

கிருஷ்ணவேணி:—நான் சிலகாலமாக குளிர்ச்சியாக இருக்கும் நறுமண ரீடாவை உபயோகித்து வந்தேன். மயிர் உதிர்வதை தடுக்கவும் புது கேசத்தை வளர்க்கவும் ரீடா மிகச் சிறந்த டானிக் என்றே கூறுவேன். அந்நியநாடுகளிலிருந்து வரும் கூந்தல் டானிக்குகளைவிட ரீடாசிறந்தது என்பதே என் அபிப்பிராயம்.

வசுந்தரா தேவி:—நான் ரீடா உபயோகித்ததில் அடர்த்தியான கூந்தல் வளர்ச்சிக்கும், பாதுகாப்பும் அது சிறந்த கூந்தல் டானிக் என்று நிரூபித்துவிட்டது.

ஆர். பத்மா:—என்னை அழகூட்டும் என்னுடைய நீண்ட கருத்த கூந்தலுக்கு ரீடாதான் காரணம். அது எவ்வளவு சீக்கிரத்தில் பலனை அளிக்கிறது! அது என் கூந்தலை மிருதுவாக்கியதுடன் அடர்த்தியான வளர்ச்சியையும் அடைந்திருக்கிறது. கூந்தல் அழகுக்கு ரீடாவையேதான் அனைவருக்கும் சிபார்சு செய்வேன்.

ராஜம்மா:—கடந்த இரண்டு மூன்று மாதங்களாக நான் ரீடா உபயோகித்ததில் எவ்வித கூந்தல் சம்பந்த உபத்திரவங்களுக்கும் அது இணையற்றது என்று அறிந்தேன். அதில் கூந்தல் வளர்ச்சிக்குத் தேவையானதும் கேச உபத்திரவங்களைத் தடுப்பதுமான மருந்துகள் இருக்கின்றன. அடர்த்தியாக அழகான கூந்தல் வளர்ச்சி விரும்பும் ஸ்திரீகள் அனைவருக்கும் ரீடா சாலச்சிறந்தது என்றே கூறுவேன்.

லக்ஷ்மிபாய்:—சில காலமாக ரீடா நான் உபயோகித்ததில் அது ஈடு இணையற்றது என்று எனக்குத் தோன்றுகிறது.

வி. என். ஜானகி:—நான் பல நாட்களாக ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன். அது கூந்தல் வளர்ச்சிக்கும் கூந்தல் பாதுகாக்கவும் சிறந்த டானிக்.

எ. ஆர். சகுந்தலா:— நான் அனேக நாட்களாக ரீடா உபயோகிக்கிறேன். அது அளிக்கும் பயன் ஏராளம்.

ரீடா ஹேர் டானிக்

Regd. No 2514.

சோதனை

N. S. ஐயர்,
மிராசுதார் & பாங்கர்.

திருக்களத்தூர்,
21-9-47.

ஐயா,

சென்ற இருபது வருஷ காலத்திற்கு மேலாகவே நான் தங்களிடம் வைரம் வாங்கிக்கொண்டு வருகிறேன். அவைகளை என் உறவினர்கள் எல்லோரும் மெச்சினார்கள். இப்படி இருக்கையில் சென்ற நாலைந்து வருஷங்களாக உங்கள் கம்பெனியில் கிடைக்கும் அதே மாதிரியான வைரங்கள் குறைவான விலைக்கு வாங்கித் தருவதாகச் சிலர் என்னிடம் சொல்லி அவ்வார்த்தைகளை நம்பி நான் அவ்வலையில் சிக்கினேன். ஆனால் அவைகளெல்லாம் தங்களுடைய வைரங்களுக்கு நிகரில்லை என்பதை பிறகு அறிந்துகொண்டேன்.

மறுபடியும் சென்ற மாதத்தில் தங்களிடம் வாங்கியது எல்லோருக்கும் திருப்தியை அளித்திருக்கிறது. நான் வெளியிடங்களில் வாங்கிய வைரங்களை மாற்றி தங்கள் கம்பெனி வைரங்களை வாங்கிக்கொடுக்கும்படி வீட்டிலுள்ளவர்கள் இப்பொழுது தொந்திரவு செய்கிறார்கள்.

தங்கள் அன்புள்ள,
(கையொப்பம்) N. S. ஐயர்.

ஸூரஜ்மல்ஸ்

ஸ்தாபிதம்: 1895
நம்பிக்கையான வைர வியாபாரிகள்

313, நேதாஜி ரோட்,
மதராஸ்.